www.tamilarangam.net

THAYAGAM

2.9.94

75¢

உண்மைத் தேடல்

# தாயகம்



## நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார்

பிரபாகரன் அறிவிப்பு

## சந்திரிகாவைக் கொல்ல சதி

## தேர்தலுக்கு முன் அரசைக் கவிழ்க்க இராணுவம் சதி

யுக்திய பத்திரிகை தகவல்

- பணயக்கைதிகளான பத்து பொலிசார் விடுவிக்கப்பட்டனர்
- வடக்கிற்கான பொருளாதாரத் தடை நீக்கம்
- தீர்வு காண்பது பற்றி தளபதிகளுடன் பிரதமர் ஆலோசனை

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தரத்தின் சின்னம்

## நிரு பிராண்ட்®

## *Niru Brand*®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்**
*Niru Brand*® **தயாரிப்புகளே.**

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## பொருளாதாரத் தடை நீக்கலுக்கு பதிலாக பத்துப் பொலிசார் விடுவிப்பு

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதற்கு பதிலாக நல்லெண்ண சமிக்ஞையாக புலிகளால் பணயக் கைதிகளாக பிடித்து நான்காண்டுகளாக வைக்கப்பட்டிருக்கும் பத்துப் பொலிசார் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜூன் 12,90ல் பொலிஸ் நிலையங்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது பிடிக்கப்பட்ட 28 பொலிசாரில் பத்துப் பேர் யாழ்ப்பாணத்தில் வைத்து செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கொழும்புக்கு கொண்டு வரப்படுவார்கள் என்று செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கைதிகள் விடுவிக்கப்பட்டதை கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் வரவேற்றிருக்கின்றன. 'அரசியல் தீர்வு காண்பதற்கான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள்' என்று நீலன் திருச்செல்வம் இந்த முயற்சியை வரவேற்றிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இன்னும் பதினெட்டுப் பொலிசாரும் 21 இராணுவத்தினரும் புலிகளின் வசம்

6 ம் பக்கம் பார்க்க..

## சந்திரிகாவைக் கொல்ல திட்டம் அம்பலம்

சந்திரிகாவைக் கொல்வதற்காக சதி செய்யப்பட்டதாக பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். கடந்த வாரம் தலதா மாளிகைக்கு சென்ற போதே அவரைக் கொல்ல இந்த முயற்சி நடைபெற்றிருக்கிறது. கொலை முயற்சியில் தான் ஈடுபடுத்தப்பட்டதாக ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே விசாரணை நடைபெறுகிறது என பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா நிருபர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

தன்னை கடந்த ஆகஸ்ட் 26ம் திகதி ஒரு கும்பல் கடத்தி கண்டிக்கு கொண்டு சென்றதாக அந்த நபர் தெரிவித்திருக்கிறார். தலதா மாளிகைக்கு சந்திரிகா வரும் சமயம் அவரைக் கொல்வதற்காகதான் கடத்தப்பட்டதாகவும் இவரைக் கொண்டு செல்லும் வழியில் மாவனல்லையில் வைத்து தான் வாகனத்திலிருந்து தப்பியதாகவும் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த அந்த நபர் தெரிவித்திருக்கிறார்.

படப்பிடிப்பாளராக நடித்து கமெராவினுள் குண்டைப் பொருத்தி சந்திரிகாவிற்கு அருகில் சென்று குண்டை வெடிக்க வைப்பதே நோக்கமாக இருந்தது என்றும் அவர் பொலிசாரிடம் கூறியுள்ளார். இது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன.

## பொருளாதாரத் தடை நீக்கம்

வடக்கிற்கான பொருளாதாரத் தடை பகுதியாக நீக்கப்பட்டிருக்கிறது. கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இதுவரையும் தடை செய்யப்பட்டிருந்த 76 பொருட்களில் 28 பொருட்கள் உடனடியாக கொண்டு செல்லப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் மருந்துகள், சத்திரசிகிச்சைக்கான பொருட்கள், பள்ளிக்கூடப் பைகள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள், காகிதாதி வகைகள், மோட்டார் வாகனங்கள், சோப், பிஸ்கட்கள்,

6 ம் பக்கம் பார்க்க..

## அரசைக் கவிழ்க்க சதி

அரசைக் கவிழ்க்க இராணுவச் சதி ஒன்று திட்டமிடப்பட்டதாக செய்தி வெளிவந்ததை அடுத்து அது குறித்து விசாரணை செய்யப்படுகிறது. ஆகஸ்ட் 16ம் திகதி பாராளுமன்றத்தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் சுதந்திரக் கட்சி வெற்றி பெறும் என்று உறுதியாக நம்பப்பட்ட நிலையில் இராணுவத்தில் ஒரு பகுதியினர் சதி செய்ய முயன்றதாக யுக்திய பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இது குறித்து பாதுகாப்பு உதவி அமைச்சர் அநுருத்த ரத்வத்தை விசாரணை செய்வதாக அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

ஆகஸ்ட் 28ம் திகதி வெளிவந்த யுக்திய பத்திரிகையில் வந்த செய்தியின்படி இராணுவத்தில் சிலர் பொதுஜன முன்னணியிடம் ஆட்சி போகக் கூடாது என்பதற்காக சதி முயற்சியைத் திட்டமிட்டதாகவும் இதை அறிந்த ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, இராணுவ தளபதி ஜெரி டி சில்வா ஆகியோர் அன்று இரவு இராணுவத் தலைமையகத்தில் சதியை முறியடிப்பதற்காக தங்கியிருந்ததாகவும் அந்தப் பத்திரிகை கூறியிருந்தது.

சில சிரேட்ட இராணுவ அதிகாரிகள் இதற்காக இன்னொரு அதிகாரியின் வீட்டில் சந்தித்து இந்த சதி குறித்து திட்டமிட்டதாகவும் கூறப்பட்டிருந்தது. வணசிங்க, டி சில்வா ஆகியோரைக் கொன்று அல்லது அதிகாரங்களைப் பறிக்க இந்த சதி மூலம் திட்டமிடப்பட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாற்றம் வந்திருக்கிறது.. தீர்வு வருமா?

## ஏடு இட்டோர் இயல்

இன்றைய உலகம் சமாதானத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.. பல நாடுகளில் யுத்தம் தொடர்ந்தாலும், சமாதானம் வரச் சாத்தியமில்லை என்று ஒரு காலத்தில் நம்பப்பட்ட * தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம் போன்ற இடங்களில் சமாதானம் முழுமையாக இல்லா விட்டாலும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சாத்தியமாகியிருக்கிறது. பல்வேறு கணிப்புகள் தப்பிப் போயிருக்கின்றன. தென்னாபிரிக்காவில் வெள்ளையர்கள் மத்தியில் டி கிளேக்கை விட மண்டேலாவுக்கு ஆதரவு இருப்பதும் பலஸ்தீனத்தில் அரபாத்தை விட ஜோர்தான் மன்னருக்கு ஆதரவு இருப்பதும் இதற்கான உதாரணங்கள்.

இன்று வட அயர்லாந்தில் ஐரிஷ் புரட்சி இராணுவமும் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கிறது. அதன் அரசியல் பிரிவின் தலைவர் ஜெரி அடம்ஸ் பகிரங்கமாகவே அரசியலமைப்புக்குட்பட்ட பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வை வலியுறுத்துகிறார். வழமை போல, இறுதித் துளி இருக்கும் வரை போராடுவோர் வீரசபதம் செய்தாலும் பொதுமக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்கவே செய்தார்கள்.

உலகெங்கும் பல்வேறு மூலைகளில் தொடர்ந்தும் யுத்தங்கள் நடக்கத்தான் செய்கின்றன. இவற்றில் பல சமாதானத்தை விரும்பாதவர்களும், மக்களின் தீர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாதவர்களும் இடதுசாரிக் கருத்துக்களுக்காக ஆட்சியைக் கவிழ்க்க முயல்வோர்களுமே (கிழக்கு திமோர், குர்திஷ் போன்ற அடக்குமுறைக்கு எதிரானவை தவிர்ந்த) இன்னமும் யுத்தத்தை தொடர்கின்றனர். இதில பொஸ்னியா, சோமாலியா, அங்கோலா போன்றன பல்வேறு சமாதானத் திட்டங்கள், ஐ.நா தலைமையிலான முயற்சிகள், தேர்தல்களைக்கூட உதாசீனம் செய்து யுத்தத்தை தொடர்கின்றன.

எங்களுக்கும் விடிவு வருமா என்ற ஏக்கம் பலருக்கு தேர்தலில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. சுதந்திரக் கட்சி தேர்தலில் வென்று, மாற்றம் ஏற்பட்டால் திருப்பம் ஒன்று ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்தது. எதிர்பார்த்தபடி சுதந்திரக் கட்சி வென்றாலும், போதிய பெரும்பான்மைப்பலம் இல்லாதது பலருக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. புலிகளுக்கும் அது ஒரு சாட்டாக அமைந்திருக்கிறது. தீர்வு ஒன்றுக்கு உடன்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள, போதிய பெரும்பான்மை இல்லாமல் தீர்வை அமுலாக்க இந்த அரசினால் முடியாது என்று புலிகளின் சார்பு பிரசுரங்கள் சொல்லிக்கொள்கின்றன. இந்த சிறிய பெரும்பான்மை பெரிய பிரச்சனையாக இருக்க முடியாது என்றே கருத வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் ஐ.தே.கவைத் தவிர்ந்த மற்றக் கட்சிகள் எதற்கும் இன்னொரு தேர்தலைச் சந்திப்பதற்கான அவசியமும் துணிவும் இல்லை. சிறுபான்மைக் கட்சிகளின் தயவிலேயே பெரும்பான்மைப் பலம் கிடைப்பதால் அந்தக் கட்சிகளும் தங்களுக்கு கிடைத்த திடீர் மவுசை மீண்டும் பெற முடியுமா என்று இன்னொரு தடவை விஷப்பரீட்சைக்கும் தயாராகவும் இல்லை. இதனால் முஸ்லிம் காங்கிரஸோ, கூட்டணியோ, ஈ.பி.டி.பிடியோ, புளொட்டோ கிடைத்தவரைக்கும் ஐந்து வருடத்தை ஓட்டத் தான் முயற்சிக்கும். போதாக்குறைக்கு தொண்டமானின் கட்சியிலும் உடனடியாகவே அரசில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. எந்த முகத்துடன் சேர்வது என்பதைத் தவிர வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை. இதை விட மலையகத்தில் சந்திரசேகரன் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதை தடுக்க வேண்டிய தேவையும் உண்டு. இதை விட தங்கள் மீதான ஊழல் குற்றச் சாட்டுக்கள் விசாரணைக்குள்ளாகும் போது ஐ.தே. கட்சியிலும் இருந்து யாரும் ஆளும் கட்சியுடன் இணைவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. மொத்தத்தில் அரசுடன் ஒட்டிக் காரியத்தை சாதிக்க சிறிய கட்சிகள் முயற்சிப்பதால் பெரும்பாலும் சந்திரிகா தன் நினைக்கும் காரியங்களை நிறைவேற்றுவதில் பெரும் தடை இருக்கப் போவதில்லை.

சில நேரங்களில் ஜனாதிபதித் தேர்தல் முடிய, இன்னொரு தேர்தலில் தங்களுக்கு பூரணமான பெரும்பான்மை கிடைக்கும், சிறிய கட்சிகளில் தங்கியிருக்கத் தேவையில்லை என பொதுஜன முன்னணி கருதும்வரைக்கும் இந்த அரசு நிலையாகத் தான் இருக்கும். இதைவிட, தமிழ் மக்களுக்கு சாதகமான தீர்வு ஒன்றுக்கு ஐ.தே. கட்சியைத் தவிர்ந்த வேறு எந்தக் கட்சியும்

*சிறிமாவின் காலத்தில் நடந்த பல்வேறு சம்பவங்கள் தமிழர்களின் நலன்களுக்கு முரணாக இருந்தாலும், தற்போதைய சந்திரிகாவின் தலைமை அவற்றுடனான தொப்புள் கொடி உறவை அறுத்துக் கொண்ட ஒன்றாகவே தெரிகிறது... புதிய கிண்ணத்தில் உள்ள புதிய இரசமாகவே தென்படுகிறது. சிறிமாவோ கூட அந்த அலையில் ஒதுங்கிக் கொண்டிருக்கிறார். பழைய சுதந்திரக் கட்சி பற்றிய கருத்துக்கள் இப்போதைய தலைமையை எடை போடுவதற்கு பயன்படுத்தப்பட முடியாது.*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறுக்கே நிற்கவும் மாட்டாது. எனவே தற்போதைக்கு இந்த தீர்வு காணப்படுவதற்கு பெரும்பான்மைப் பலம் போதாது என்பது சரியானதல்ல.

தற்போதைக்கு தீர்வை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற வாதமும் அடிபட்டுப் போய் விட்டது. சிங்கள மக்களைப் பொறுத்தவரை வரை இனவாத அரசியலை நிராகரித்து விட்டார்கள். ஜோர்ஜ் ராஜபக்ஷவின் புதல்வி நிருபமா தமிழர் ஒருவரைத் திருமணம் செய்தார் என்று இனவாதம் பேசி பிரசாரம் செய்த போதும் அவர் பத்தாயிரம் அதிகப்படியான வாக்குகளால் வென்றிருக்கிறார். சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறிக் கொண்ட பௌத்த தலைவர்களும் இப்போது அமைதியாகி விட்டார்கள். தினேஷ், சுதந்திரக் கட்சியிலிருந்து ஐ.தே. கவிற்கு தாவிய ஹெல உறுமய உறுப்பினர்கள், காமினி ஜயசூரிய போன்றவர்கள் முற்றாக அரசியலிலிருந்து துடைத்தெறியப் பட்டிருக்கிறார்கள். இறுதி நேரத்தில் 'புலிகளுக்கு ஈழம் கொடுக்க வேண்டும் என்றால் பொதுஜன முன்னணிக்கு வாக்களியுங்கள்' என்று பிரசாரம் செய்தும் பலனில்லாமல் போய் விட்டது. மொத்தத்தில் மக்களைச் சாட்டி, யுத்தத்தில் வியாபாரம் நடத்த முயன்ற ஐ.தே.கட்சியின் செயற்பாடு தான் தீர்வை காண முடியாமல் தள்ளிப் போகச் செய்தது.

பதினேழு வருட ஆட்சியில் யுத்தம் ஆரம்பித்து உச்சம் அடைந்த நிலையில் எதுவும் செய்யாமல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தங்களை தெரிவு செய்தால், குறிப்பிட்ட காலத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பேன் என்று இறுதிநேரத்தில் ஜனாதிபதி கூச்சல் போட்டும் யாரும் கேட்டுக் கொள்ளவில்லை. தொண்டமானின் அரவணைப்பு இல்லாவிட்டால் ஐ.தே.கட்சி இங்கே கன்சர்வேட்டிவ்களுக்கு நடந்த கதியை அனுபவித்திருக்கவும் கூடும். சிங்கள மக்கள் இனவாதத்தை தூக்கி எறிய, தமிழர்கள் இனவாதத்திற்கு துணைபோயிருக்கிறார்கள்.

பலருக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்த சந்திரிகா தீர்வுக்கு முயல்வாரா என்பது எம் முன்னால் உள்ள கேள்வி. இதில் சந்தேகங்கள் இருந்தாலும் நம்பிக்கை தரக் கூடிய அம்சங்கள் பல உண்டு. சந்திரிகா தீர்வை தாம்பாளத்தில்

**இந்த சிறிய பெரும்பான்மை பெரிய பிரச்சனையாக இருக்க முடியாது என்றே கருத வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் ஐ.தே.கவைத் தவிர்ந்த மற்றக் கட்சிகள் எதற்கும் இன்னொரு தேர்தலைச் சந்திப்பதற்கான அவசியமும் துணிவும் இல்லை. சிறுபான்மைக் கட்சிகளின் தயவிலேயே பெரும்பான்மைப் பலம் கிடைப்பதால் அந்தக் கட்சிகளும் தங்களுக்கு கிடைத்த திடீர் மவுசை மீண்டும் பெற முடியுமா என்று இன்னொரு தடவை விஷப்பரீட்சைக்கும் தயாராகவும் இல்லை. போதாக்குறைக்கு தொண்டமானின் கட்சியிலும் உடனடியாகவே அரசில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது எந்த முகத்துடன் சேர்வது என்பதைத் தவிர வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை. மொத்தத்தில் அரசுடன் ஒட்டிக் காரியத்தை சாதிக்க சிறிய கட்சிகள் முயற்சிப்பதால் பெரும்பாலும் சந்திரிகா தன் நினைக்கும் காரியங்களை நிறைவேற்றுவதில் பெரும் தடை இருக்கப் போவதில்லை.**

வைத்து தரப் போகிறார் என்பதல்ல. சிறிமா காலத்தில் அமுலான அரசியலமைப்பும் தரப்படுத்தலும் எமது போராட்டத்தின் ஆரம்ப காரணிகளாக அமைந்த போதும் தற்போதைய போராட்டத்தில் அவை முக்கியமானவை அல்ல. தற்போதைய போராளிகள் பலரும் இந்த பிரச்சனைகளின் பின்னால் பிறந்தவர்களே. தலைமைப்பீடமும் இவ்வாறான பிரச்சனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டதுமல்ல. தொடங்கிய போதிருந்த காரணிகள் வேறு, தற்போதைய காரணிகள் வேறு.

சிறிமாவின் காலத்தில் நடந்த பல்வேறு சம்பவங்கள் தமிழர்களின் நலன்களுக்கு முரணாக இருந்தாலும், தற்போதைய சந்திரிகாவின் தலைமை அவற்றுடனான தொப்புள் கொடி உறவை அறுத்துக் கொண்ட ஒன்றாகவே தெரிகிறது... புதிய கிண்ணத்தில் உள்ள புதிய இரசமாகவே தென்படுகிறது. சிறிமாவோ கூட அந்த அலையில் ஒதுங்கிக் கொண்டிருக்கிறார். பழைய சுதந்திரக் கட்சி பற்றிய கருத்துக்கள் இப்போதைய தலைமையை எடை போடுவதற்கு பயன்படுத்தப்பட முடியாது. இதையும் விட, சந்திரிகா முன்பு கூட விஜய குமாரணதுங்கவுடன் வடக்கே சென்று சமாதான முயற்சிகளில் ஈடுபட்டவர். வழமையாக பதவிக்கு வருவதற்காக இனவாதம் கக்கி, சிறுபான்மையினர் மீதான வெறுப்பை பெரும்பான்மையினருக்கு ஏற்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்பவர்களுக்கு மத்தியில் துணிச்சலாகவே கட்சிக்குள் உள்ள வேறுபாடுகளையும் கடந்து வடக்கு கிழக்கு இணைப்பு, தமிழருக்கான உரிமை கொடுத்தல் பற்றி தேர்தலுக்கு முன்பாகவே பிரசாரம் செய்தவர் அவர்.

வடக்கு கிழக்கு இணைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உடனான ஒப்பந்தம் போன்றவற்றில் சந்திரிகாவின் நிலைப்பாட்டுடன் தன்னை அடையாளம் காட்ட சிறிமா விரும்பவில்லை, இருந்தாலும் தேர்தலில் வெற்றியடைந்த பின்னர் இதே ஒப்பந்தத்தினால்தான் ஆட்சியமைக்க முடிந்தது என்பதை அறியும் போது, அவரது ராஜதந்திரத்தை சுதந்திரக்கட்சியினர் நிச்சயம் புகழ்ந்தே ஆவர். பல விடயங்களில் சிங்கள வாக்காளர்களைப் பகைத்துக்கொள்ள விரும்பாத பழைய தலைமையின் நிலைப்பாட்டை துணிச்சலாக மாற்றி, தீர்வு பற்றிய கருத்துக்களை தெளிவாகச் சொன்னார்.

இவையெல்லாம் இருந்தால் தீர்வுக்கு தடையென்ன என்று பலரும் நினைக்கலாம். தடை இப்போது ஒரு பக்கமாக சாய்ந்து விட்டது. இது வரை காலமும் சிங்கள பௌத்த ஆதிக்க, பேரினவாதம் என்று பல்வேறு அடைமொழிகளுடன் அழைக்கப்பட்ட ஐ.தே.கட்சி அரசு இன்று இல்லை. ஐ.தே.கட்சி அரசின் போக்கு மட்டும் முழுச் சிங்கள இனத்தின் போக்கும் அல்ல என்பது உணரப்படாமலே, தமிழ் மக்கள் மத்தியில் இந்த சிங்கள எதிர்ப்புணர்வு இந்த குறுகிய காலத்தில் வேகமாக ஊட்டப்பட்டது. பிரேமதாசாவின் இரண்டாவது பதவிக் காலத்தில் நிச்சயமாக தீர்வு கிடைக்கும் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> எந்த அரசியல் தீர்வு என்றாலும்.. அதிக பட்சம் ஐந்து வருடங்களுக்கு பின்பு என்றாலும் புலிகள் தேர்தலை சந்திக்க வேண்டிய ஒரு கட்டாயம் உண்டு எந்த தேர்தலையும் புலிகள் சந்திக்கத் தயாராக இல்லை என்பது தெரிந்த ஒன்று. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்கள் தங்கள் கருத்தைச் சுதந்திரமாக சொல்வதற்கு கடந்த பத்தாண்டுகளில் கிடைத்த ஒரே சந்தர்ப்பம் சுதுமலையில் தான். சுதுமலையில் தனது உரையில் நாங்கள் இந்தியாவை நம்பி ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் என்ற போது கரகோஷம் செய்யும் போது மட்டுமே தமிழ் மக்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை சுதந்திரமாக வெளிப்படுத்தினார்கள். ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஜனநாயகத்தில் நீடிக்க முடியாது. தொலைநோக்கும் பொருளாதாரம் பற்றிய தீர்க்கமான சிந்தனையும் இல்லாமல் வெறும் போர்வெறியினால் ஆட்சி நடத்த முடியாது. ஜனநாயக வழிக்குத் திரும்பி தேர்தலில் பங்கு பற்றினாலும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய இன்னொரு நிர்ப்பந்தமும் வரும். ஆயுதங்களை இழந்த நிலையில் நேரக் கூடிய ஆபத்துக்கள் தெரிந்ததே

தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் நம்பியிருந்தனர். முதல் பதவிக்காலத்தில் தீர்வைக் கொடுத்தால் அதைச் சுதந்திரக் கட்சி தனக்கு சாதகமாக்கும் என்ற பயம் அவருக்கு இருந்ததை அவர் உணர்த்தியிருந்தார்.

புதிய அரசு இனவாதத்தை அரசியலாக்க இதுவரை முயலவில்லை. தமிழர் வெளிநாட்டமைச்சர், தமிழ் பூர்வீகமானவர் சந்திரிகாவின் அமைச்சுகளுக்கு துணை அமைச்சர் என்று முக்கிய பதவிகளில் தமிழர்கள் நியமிக்கப்பட்டும் உள்ளார்கள். இதுவரையும் தமிழரை இனஅழிப்புச் செய்ய சிங்கள பேரினவாதம் முயல்கிறது என்று சொல்ல, நியாயமான காரணங்கள் இருந்தன. இன்று இந்த நிலை இல்லை. சந்திரிகா கூட 'தீர்வை சிங்கள பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்' என்று தான் கூறியிருக்கிறார். தேர்தலின் போது தீர்வு பற்றிச் சொன்னதை மக்கள் ஏற்றிருப்பதால், மக்களால் சுமத்தப்பட்ட இந்த கடமையை நிறைவேற்றுவது உடனடிக் கடமையுமாகும்.

எந்த தீர்வு வழங்கலையும் எதிர்த்து இனவாதத்தை கிளப்ப ஐ.தே.கட்சி முயன்றாலும், அதன் பழைய அரசு மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களின் விசாரணை அவர்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாகும். ஐ.தே.கட்சி அரசில் இருந்த போது அதே கட்சியாலேயே ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான காமினி திசநாயக்க அதே கட்சியினால் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இந்த ஊழல் விசாரணைகள் துரிதப்படுத்தப்படும் பட்சத்தில் ஐ.தே.கட்சி தன்னைப் பாதுகாப்பதில் தான் நேரத்தை செலவிட வேண்டியிருக்கும். எனவே பலம் வாய்ந்த எதிர்க்கட்சி என்பது தற்போதைக்கு இல்லை. எந்த தீர்வு வழங்கலிலும் அது லாபம் பெற வாய்ப்புகளும் இல்லை.

ஐரிஷ் ராணுவம் ஒரு தலைப்பட்சமாகவே யுத்த நிறுத்தத்தை அறிவித்து 'பந்தை மறுபக்கத்துக்கு வீசி' விட்டு நிற்கிறது. தற்போது லண்டன் அரசு மீது தான் தீர்வைக் காண்பதற்கான அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றன... தேர்தல் முடிந்து பொதுஜன முன்னணி வெற்றி பெற்றதாக செய்திகள் வந்தவுடன் வடக்கில் இருந்து வந்த தகவல்கள் நம்பிக்கையீனத்தையே வெளிக்காட்டி நின்றன. போதிய பெரும்பான்மை இல்லை என்று ஒரு காரணம், இராணுவத்தினரை செயற்பட விடாமல் நிறுத்த மாட்டோம் என்றதும் அதற்கு கண்டனம்..

இன்று பந்து புலிகளின் கையில்.. புலிகளின் பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும், வடக்கு கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் மாத்திரமல்ல, புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்றதும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. அதாவது இந்த கோரிக்கை சமாதானத்திற்கு தடையாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையில். சமாதானப் பேச்சுவார்த்தைக்காக ஆயுதம் கைவிடுதல் கூட நிபந்தனையாக்கப்படவில்லை. ஆனால் இன்னமும் புலிகளின் தலைமைப்பீடம் ஏன் சாதகமாக சமிக்ஞைகளை இன்னமும் காண்பிக்கவில்லை? தீர்வு வந்து விடப் போகிறதே என்ற பயம் தான் மறுபக்கத் தலைமைக்கு வந்து விட்டது போலும்..

இதுவரை காலமும் வடக்கு கிழக்கை யுத்த சூழ்நிலையில் வைத்து அதைக் காரணம் காட்டி தமிழ் மக்களை அடக்கி வைத்திருப்பதற்கு சிங்கள இனவாதம் ஒரு 'பூதமாக்கப்பட்டிருந்தது'. இன்று அந்தப் பூதம் போத்தலுக்குள் அடைக்கப்பட்டு விட்டது. இனியும் தமிழ் மக்களை சிங்கள இனவாதத்தை காரணம் காட்டி ஏமாற்ற முடியாது. பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு விட்டது. போதாததற்கு பூனகரிப் பாதை திறப்பதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன. இந்த நிபந்தனைகளில் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. புலிகள் எதிர்பார்த்தபடியே அரசும் தனது உளச்சுத்தியையும் நல்லெண்ணத்தையும் வெளியிட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை உடனடியாக பற்றிக் கொண்டு தீர்வைக் காண்பதில் என்ன தயக்கம்? சமாதானக் கதவு திறந்து வைக்கப்பட்டுத் தான் இருக்கிறது. சமாதானம் செய்பவர்கள் எனது வீட்டுக்கு வந்து தான் சமாதானம் செய்ய வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்க வேண்டும்? பாதிவழியில் சென்று வரவேற்று சமாதானம் செய்வதற்கு என்ன தடை?

இங்கே தான் பலருடைய எதிர்பார்ப்பும் தவறுகிறது. உண்மையில் தீர்வு என தமிழ் மக்கள் கருதுவது வேறு. புலிகள் கருதுவது வேறு. தீர்வாக எதிர்பார்க்கப்படுவது சமாதானம், சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக தமிழருக்கான நியாயமான உரிமை வழங்கப்பட்ட சுதந்திரம்.. இது மக்கள் கருதுவது. ஆனால் புலிகளோ தங்கள் கையில் ஏகபோக அதிகாரம் கிடைப்பதைத் தான் தமிழருக்கான உரிமை வழங்கல் என்கிறார்கள். இந்த இரண்டுமே எப்போதுமே குழப்பப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்திருக்கின்றன. ஆண்ட பரம்பரை மீண்டும் உரிமையுடன் சட்டபூர்வமாக ஆள நினைக்கிறது. அரசு தீர்வாகக் கருதுவது இனமின்னறு. ஐக்கிய இலங்கைக்குள்ளான தமிழருக்குரிய உரிமை.

பாலசிங்கம் சமஷ்டியைப் பரிசீலிக்கத் தயார் என்று எப்படித் தான் சொன்னாலும் அதற்கு எந்த வித கவனமும் செலுத்தத் தேவையில்லை. இதே பாலசிங்கம் தனது வார்த்தைகளை விழுங்கித் தீர வேண்டியும் ஏற்படலாம். முன்னைய பேச்சுவார்த்தையின் போதும் மாத்தயா பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். இறுதியில் மாத்தயாவே தூக்கியெறியப்பட்டார். எனவே பாலசிங்கம் எதைச் சொன்னாலும் அந்த அறிவித்தல்களை தலைவர் 'தன்னுடைய கருத்துக்கள் அல்ல' என்று எந்த நேரமும் சொல்லலாம். அரசு எதிர்பார்ப்பது போல, சமாதானத்திற்கான சமிக்ஞைகள் பிரபாகரனிடமிருந்தே வரவேண்டும்.

புலிகளைப் பொறுத்தவரை அரசியல் ரீதியான தீர்வு ஒன்றுக்கு சம்மதிப்பதற்கு முன்னர் யோசிப்பதற்கு நிறையவே உண்டு. எந்த அரசியல் தீர்வு என்றாலும்.. அதிக பட்சம் ஐந்து வருடங்களுக்கு பின்பு என்றாலும் புலிகள் தேர்தலை சந்திக்க வேண்டிய ஒரு கட்டாயம் உண்டு. எந்த தேர்தலையும் புலிகள் சந்திக்கத் தயாராக இல்லை என்பது தெரிந்த ஒன்று. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்கள் தங்கள் கருத்தைச் சுதந்திரமாக சொல்வதற்கு கடந்த பத்தாண்டுகளில் கிடைத்த ஒரே சந்தர்ப்பம் சுதுமலையில் தான். சுதுமலையில் தனது உரையில் நாங்கள் இந்தியாவை நம்பி ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் என்ற போது கரகோஷம் செய்யும் போது மட்டுமே தமிழ் மக்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை சுதந்திரமாக வெளிப்படுத்தினார்கள். ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஜனநாயகத்தில் நீடிக்க முடியாது. தொலைநோக்கும் பொருளாதாரம் பற்றிய தீர்க்கமான சிந்தனையும் இல்லாமல் வெறும் போர்வெறியினால் ஆட்சி நடத்த முடியாது. ஜனநாயக வழிக்குத் திரும்பி தேர்தலில் பங்கு பற்றினாலும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய இன்னொரு நிர்ப்பந்தமும் வரும். ஆயுதங்களை இழந்த நிலையில் நேரக்கூடிய ஆபத்துக்கள் தெரிந்ததே.

அல்லது அங்கோலாவில் யுனிடா போன்றே தேர்தலில் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் சண்டை தொடரும் நிலையே இங்கும் வரும்.

பிரபாகரனைப் பொறுத்தவரை தமிழீழம் தான் முடிந்த முடிவு என்பது அவர் தனது உரைகளிலும் பேட்டிகளிலும் தெளிவாக்கிய ஒன்று. அந்த முடிவிலிருந்து தான் மாறினாலும் தனக்கும் கூட மரண தண்டனை தான் என்பது அவரது நிலைப்பாடு. எந்தக் கட்டத்திலும் ஐக்கிய இலங்கைக்குள்ளான தீர்வு பற்றி அவர் அழுத்தம் திருத்தமாக எதையும் சொல்லவில்லை. தன்னுடைய சமாதானச் சமிக்ஞையில் எவ்வகையான தீர்வை தான் எதிர்பார்ப்பதாக சொல்லாத வரைக்கும் எந்தப் பேச்சுவார்த்தையும் பயனற்றதாகவே முடியும்.

இப்படியாக மூன்று தரப்பினரும் தீர்வு என்று தங்களுக்கு தாங்களே ஒவ்வொன்றை உருவகித்துக் கொண்டுள்ள நிலையில் தீர்வு சாத்தியமா? எந்தப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கும் புலிகள் விதித்த நிபந்தனைகள் பல ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. இந்த பொருளாதார தடை நீக்கல், பூனகரிப் பாதை திறப்பு, யுத்த நிறுத்தம் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் ஏற்படக் கூடும். அதன் பின்னரும் சமாதானத்திற்கு பின்வாங்குவதற்கான காரணங்களை புலிகள் தமிழ் மக்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்.

புலிகள் இனி எதைச் சொல்லி பேச்சுவார்த்தையைக் குழப்ப முடியும் என்று கேள்வி எழலாம். இருக்கிறது. அது தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை. வழமை போல சுயநிர்ணய உரிமையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் புலிகள் குறியாக இருப்பர். நியாயமான கோரிக்கை இது. ஆனால் புலிகளின் நோக்கம் உள்நோக்கம் சார்ந்தது. அதாவது அரசியலமைப்பு ரீதியாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அரசு ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், 'நல்லது, எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, நாங்கள் செக்கோஸ்லாவாகியா மாதிரி பிரிந்து கொள்வோம்' என்று தந்திரமாக ஈழப் பிரகடனம் செய்வது தான் நோக்கமாக இருக்கும். இதன் பின்னர் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் புலிகளுக்கு கிடையாது.

இப்படியான பிளவுக்கு பொதுஜன முன்னணியோ, ஐ.தே. கட்சியோ சம்மதிக்கப் போவதுமில்லை. இங்கே வழமை போல இழுபறிகள் ஆரம்பமாகும். வழமை போல யுத்த நிறுத்தத்தை தங்களைப் பலப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகத் தான் புலிகள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். பாலசிங்கம் 90க்கு முந்திய நிலையில் இராணுவ முகாம்கள் குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதும் இந்த தந்திரங்களில் ஒன்றே. அதன்படி தங்களைப் பலப்படுத்திக் கொண்டு 'தமிழீழத்தை அடித்துப் பறிக்கும் முயற்சியில்' புலிகள் ஈடுபடக் கூடும்.

தமிழீழமா, ஐக்கிய இலங்கையா எமது நோக்கம் என்று தெரியாத நிலையில் பேச்சுவார்த்தைகள் எந்த பயனும் அளிக்காது. அல்லாத பட்சத்தில் நிலைமை வழமை போல் 'மீண்டும் முதலாவது சதுரத்திற்குள்' தொடங்கி ஆரம்பிக்கும். பேச்சுக்கள் தோல்வியுறும் பட்சத்தில்.. புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்திய பின்பு புலிகளால் கொல்லப்பட்ட ராஜீவ், பிரேமதாசா, அமிர்தலிங்கம் வரிசையில் சந்திரிகா சேர்க்கப்படக் கூடிய ஆபத்தும் நிறைய உண்டு.

தற்காலிகமாக அமைதி ஏற்பட்டாலும் மக்கள் எதிர்பார்க்கின்ற நிரந்தர சமாதானம், உரிமை, தீர்வு வேண்டுமாயின் எங்கள் தலைமைக்கு தனது நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் பொருளாதாரத் தடை பகுதியாக நீக்கப்பட்டதற்காக, கைது செய்யப்பட்ட பொலிசாரிலும் ஒரு பகுதியினர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இது நம்பிக்கை தரக்கூடியதாக இருந்தாலும், அடுத்த நடவடிக்கைகள் தான் உண்மையான மாற்றத்தை காட்ட முடியும்.

'முடிந்த முடிவு தமிழீழம் தான் என்றால்' அடித்துப் பறிப்பது தான் சரியான தீர்வு. இராணுவ நடவடிக்கைகளால் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்பதை அரசு உணர்ந்திருப்பது போன்றே ஆயுதங்களால் நாட்டைப் பிரிக்க முடியாது என்பதையும் புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லாத பட்சத்தில் தீர்வு வெறும் கனவுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்வு காண்பது பற்றி தளபதிகளுடன் ஆலோசனை

கடந்த வியாழக்கிழமை வடக்கு கிழக்கு பிரச்சனையைத் தீர்ப்பது குறித்து பாதுகாப்புப் படையினரை கருத்தை அறிந்து கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், இராணுவத் தளபதிகள், யுத்த முனையில் இருக்கும் இராணுவத் தளபதிகள் ஆகியோரைச் சந்தித்தார். வடக்கு கிழக்கு நிலை பற்றி மூன்று மணி நேரம் படைத்தளபதிகள் பிரதமருக்கு தகவல் தெரிவித்தனர். எந்த விதமான போர்நிறுத்தம் பற்றியும் இராணுவத்தினருடன் ஆலோசிக்க இருப்பதாகவும் வடக்கில் உள்ள துருப்புகளை சென்று சந்திக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

சந்திரிகா வடக்கே சென்று துருப்புகளை சந்திக்க இருப்பதாக முதலில் செய்தி வெளிவந்த போதும் பின்னர் அந்த விஜயம் பின்போடப் பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உதவி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தான் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கு இந்த வார இறுதியில் சென்று பிரதமரின் சமாதான முயற்சிகள் பற்றி தெரிவிக்க இருப்பதாகவும் படையினரின் நலன்களை கவனிக்க இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு முன்னதாக படைத்தளபதி ஜெரி டி சில்வா வடக்கு, கிழக்கில் உள்ள தளபதிகளுடன் சமாதான முயற்சிகள் பற்றி உரையாடுவதாக இருந்தது. தேர்தலுக்கு முன்பாக திட்டமிடப்பட்ட புதிய தாக்குதல் புதிய அரசு மாற்றத்தின் பின்னர் ரத்துச் செய்யப்பட்டதாகவும் அதற்கு காரணம் அரசின் சமாதான முயற்சிகளே என்றும் ஜெரி டி சில்வா தெரிவித்திருந்தார். இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட என்று வாங்கப்பட்ட ரஷ்ய ஆயுதங்களுக்கான ஒப்பந்தமே புதிய அரசினால் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

தங்கள் படையினரிலும் பலர் யுத்தத்தை நிறுத்துவதில் ஆர்வம் காட்டுவதாக ஜெரி டி சில்வா தெரிவித்தார். 'எந்த முடிவும் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லாதபடி இந்த யுத்தம் போய்க் கொண்டிருந்தது. ஒன்றில் யுத்த முடிய வேண்டும் அல்லது வெல்ல வேண்டும் என்பதே பல படையினரின் நோக்கம்' என்று அவர் தெரிவித்தார்.

## பொருளாதாரத்தடை

மண்ணெண்ணெய், ரேடியோ, ரேடியோ உபகரணங்கள், தேங்காய் எண்ணெய், சொக்கலேட்டுக்கள், ஜெனரேற்றர்கள், சைக்கிள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் கொள்கலங்கள், பேனைக்கள், ஒலிநாடாக்கள் மெழுகுவர்த்திகள், பொலித்தீன் வகையருக்கள் போன்ற 28 வகைப் பொருட்களை உடனடியாகக் கொண்டு செல்ல முடியும்.

தமிழ் மக்கள் மீதான சுமையைக் குறைப்பதற்காக இந்த தடையை நீக்கியுள்ளோம், இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் இது முதலாவது படி என்று பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய சந்திரிகா தெரிவித்தார். தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பேசிய அவர் 'நாங்கள் இந்தப் பொருளாதாரத் தடையை எந்த நிபந்தனையுமின்றி நீக்கியிருக்கிறோம், எதிர்த்தரப்பும் சமமான நல்லெண்ணத்தைக் காட்டும் என்று எதிர்பார்க்கிறோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

ஆயினும் பட்டரிகள், மின்சார வயர்கள், ஆயுதங்களுக்கான தடை தொடர்ந்தும் இருக்கும்.

பிரபாகரனுக்கு நெருக்கமான பேச்சாளர் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்று தெரிவித்துள்ளார்கள், ஆனால் அவர்கள் யுத்த நிறுத்தத்தைக் கோருகிறார்கள் என்று கூறிய சந்திரிகா தான் பிரபாகரனிடம் இருந்து நேரடியான பதிலை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இராணுவத் தலைவர்கள் இந்த பொருட்களுக்கான தடையை நீக்க சம்மதித்ததாகவும் அவர் கூறினார்.

இதைவிட புலிகளும் மற்ற தமிழ்க்குழுக்களும் தமிழ் மக்களுக்கான உணவு வினியோகத்தை தடுக்கவோ, வரி விதிக்கவோ கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்த சந்திரிகா அந்த வரிகளால் மக்கள் அதிக விலை செலுத்த வேண்டியுள்ளதாக தெரிவித்தார். 'அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம்' என்றார்.

வடக்கே விஜயம் செய்வீர்களா என்று கேட்ட போது காலம் கனியும் போது தான் தனது தேர்தலுக்கு முன்னைய வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்றும் தெரிவித்தார்.

படையினருடனான சந்திப்பின் போது இராணுவத்தினர் முழுமையாக பொருளாதாரத் தடையை நீக்குவதை விரும்பவில்லை என்றும் குண்டுகள் தயாரிக்க பயன்படும் முக்கிய பொருட்கள் மீதான தடை தொடர்ந்தும் அமுலாக வேண்டும் என்றும் படையினர் விரும்புவதாகவும் ஐலண்ட் பத்திரிகை தெரிவித்தது.

## பொலிசார் விடுவிப்பு

உள்ளனர். இந்த வருடத்திற்குள் தாங்கள் விடுவிக்கப்படா விட்டால் உண்ணாவிரதம் இருந்து சாகப் போவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். தங்களை தேர்தலுக்கு முன்னர் விடுவிக்க அரசு முயற்சிக்கும் என்று அவர்கள் நம்பியிருந்தனர். 'நாங்கள் யுத்தம் செய்யும் வரைக்கும் எல்லாம் நன்றாக இருந்தது. நாங்கள் போர்முனையை விட்டு வெளியேறியதும் எங்களை மறந்து விட்டார்கள்' என்று ஜெயவீர பண்டார என்ற சிப்பாய் தெரிவித்திருந்தார்.

முதலில் பொருளாதாரத்தடை நீக்கப்பட்டால் பொலிசாரை விடுவிக்க முடியும் என்று பாலசிங்கம் தெரிவித்திருந்தார். ஈழநாதம் பத்திரிகையில் கடந்த வாரம் திங்கட்கிழமை இந்த செய்தி வெளிவந்திருந்தது. 'எங்கள் கதவுகள் பேச்சுவார்த்தைக்காக திறந்திருக்கின்றன' என்று பாலசிங்கம் கூறியதுடன் பேச்சுவார்தைக்கு தாம் தயார் என்றும் தெரிவித்திருந்தார். அதற்கு வசதியாக அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவித்து, பொருளாதாரத் தடையை நீக்க, பூனகரிப் பாதையைத் திறக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரஷ்ய வாகனங்கள் பழுதானவை

ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கவன வாகனங்களில் பழுதுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் வாங்கப்பட்ட இந்த வாகனங்கள் பற்றிய அறிக்கை ஒன்றில் இராணுவ பொறியியலாளர் 'இந்த வாகனங்களில் இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதுடன் ஸ்டியரிங் பகுதியிலும் பழுதுகள் உள்ளன. ஏற்கனவே இந்த குறைபாடுகள் சுட்டிக் காட்ட போது, அவை திருத்தப்படும் என்று ரஷ்யா உறுதியளித்த போதும் அவை திருத்தப்படவில்லை' என்று தெரிவித்திருக்கிறார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பாக விமானம் மூலம் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட பி.எம்.பி 2 ரக பாவித்த கவச வாகனங்கள் எட்டு பயிற்சிக்காக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. அடுத்த தொகுதி கடந்த வாரம் வந்து விமான நிலையத்தில் உள்ளது.

ரஷ்யா 200 கவச வாகனங்கள், பீரங்கிப் படகுகள், ஹெலிகொப்டர்கள், போக்குவரத்து விமானம் போன்றவற்றை இலங்கைக்கு வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் பாராளுமன்ற நிதி அமைச்சின் அனுமதியின்றி நடந்ததாககூறி புதிய அரசை அதை ரத்துச் செய்தது. இலங்கைக்கு அனுப்பப்பட முன்னர் எல்லா வாகனங்களும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று இராணுவ இயந்திரவியலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

# தனியார் மயமாக்கல் தொடரும்

பழைய ஐ.தே.கட்சி அரசு அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தியது போலவே புதிய அரசும் பல அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த உள்ளது. மேலதிகமாக 25 நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படும். அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தக் கூடாது என்று பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் புதிய அரசு அந்த நிலையில் இல்லை என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயினும்லாபத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது. பழைய அரசாங்க காலத்தில் தனியார் மயப்படுத்தலின் போது அரச அதிகாரிகள் பலர் பணம் சம்பாதித்ததாக குற்றம் சாட்டப்பட்டதுடன் இந்த தனியார் மயப்படுத்தல் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

ஆனால் புதிய அரசு இந்த தனியார் மயப்படுத்தல் நிறுத்தப்பட மாட்டாது என்று உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு புதிய அரசு உறுதியளித்துள்ளதாக இந்த அதிகாரி கூறினார்.

# தடுப்புக்காவலில் உள்ளோர் குறித்து விசாரணை

கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் விசாரணையின்றி வைக்கப பட்டிருப்போர் குறித்து விசாரணை செய்ய விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று நீதியமைச்சர் காமினி லக்ஸ்மண் தெரிவித்துள்ளார். அவசர விதிகளின் கீழும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் அறுநூறு பேர் வரை ஆண்டுக்கணக்கில் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர். யாரை விடுவிக்க வேண்டும், யார் மீது வழக்குத் தொடர வேண்டும் என்பது குறித்து மூன்று மாதத்தில் இந்த விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும்.

காணமல் போனவர்கள் குறித்து விசாரிக்க மூன்று விசாரணைக்குழுக்களும் ஆரம்பிக்கப்படும். ஜனவரி 88க்குப் பின்னர் காணமல் போனவர்கள் குறித்து விசாரிப்பதுடன் அதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்னல் நிறுத்தவும் முயற்சிகள் நடக்கின்றன. அத்துடன் இவ்வாறன நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறமல் இருக்க செய்ய வேண்டிய முயற்சிகள் குறித்தும் ஆராயப்படும்.

முக்கியமாக எம்பிலிப்பிட்டியவில் 31 மாணவர்கள் காணமல் போனதும் அந்த இடத்தில் பெரும் புதைகுழி கண்டுபிடிக்கப் பட்டதும் குறித்தும் ஆராயப்படும்.

அத்துடன் காணமல் போனவர்கள், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு கொடுப்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இது குறித்து கனடிய, பிரிட்டிஷ் தூதுவரக அதிகாரிகளுடன் தாம் ஆராய்ந்ததாக நீதியமைச்சர் தெரிவித்தார்.

# உதவி அமைச்சர்கள் நியமனமானர்கள்

புதிய அரசில் தற்போது 24 உதவி அமைச்சர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். கடந்த வியாழக்கிழமை இவர்கள் பதவியேற்றார்கள்.

இவர்களில் ஜெயராஜ் பெணண்டோப்பிள்ளை நிதி, திட்டமிடல், இனவிவகாரம், தேசிய ஒருமைப்பாடு போன்றவற்றுக்கு உதவி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இந்த அமைச்சுகள் பிரதமர் சந்திரிகாவின் பொறுப்பில் உள்ளன. வெளிநாட்டு வர்த்தகம், நீதி, அரசியலமைப்பு விவகாரத்திற்கு உதவி அமைச்சராக பி.பி.ஜி.கலுகல்ல நியமிக்கப்பட்டார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவராக சந்திரசேகரன் வர்த்தகம், உணவு உதவி அமைச்சரானர். டி.பி. விக்கரமசிங்க வெளிநாட்ட லுவல்களுக்கு உதவி அமைச்சரானர். மகிந்த விஜேசேகர கப்பல், துறைமுகம், புனர்வாழ்வு அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவை அஷ்ரப்பின் துறைகளாகும். பேர்ட்டி திசநாயக்க கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவி அமைச்சரானர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறைசேரிப் பணம் மாயமாய் மறைந்தது

திறைசேரியிலிருந்து எழுபது கோடி டொலர்கள் காணாமல் போயுள்ளதாக சந்திரிகா அறிவித்திருக்கிறார். காணாமல் போன பணம் பற்றி அதிகாரிகள் விசாரணை நடத்துவதாகவும் இதை விட மேலும் தொகை காணாமல் போயிருக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தலுக்கு இரு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அறிவித்த சமூக நலன் திட்டங்களும் இதற்கு ஒரு காரணமாகும் என்றும் இந்த தொகை காணாமல் போனதால் முன்னைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அனைத்து பணக் கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இதில் ரஷ்ய ஆயுத ஒப்பந்தமும் அடங்குகிறது.

இந்த ஒப்பந்தங்கள் மீள பரிசீலனை செய்யப்பட்டு புதிய கொடுப்பனவு முறைகள் அமுலாக்கப படும். அரசு மேலதிகமாக திறைசேரியிலிருந்து 33 பில்லியன் ரூபாய்களை செலவிட்டிருப்பதால் மத்திய வங்கி பணத்தை அச்சிட முன்வந்ததாகவும் தான் அதை நிறுத்த வேண்டிய ஏற்பட்டதாகவும் சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

இதற்குள் பழைய அரசு காலத்தில் நடந்த பெரும் ஊழல்கள், லஞ்சம் போன்றன பற்றி பல குற்றச்சாட்டுகள் வந்து குவிந்துள்ளன என்று நீதியமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

லஞ்சம் பற்றி விசாரணை செய்ய திருமதி நெலும் கமகே மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்ற வருடம் அமைச்சர்கள், ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி விசாரணை செய்தபோது இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

முன்னைய அரசு செய்த மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் பற்றி புதிய அரசு விசாரணை செய்யும். ரஷ்ய ஆயுத ஒப்பந்தம், மூன்று எயர்பஸ் வாங்கும் ஒப்பந்தம், இந்தியாவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் ஐயாயிரம் பஸ்கள் வாங்கும் ஒப்பந்தம் ஆகிய மூன்று ஒப்பந்தங்களிலும் ஊழல் நடந்ததா என்பது குறித்து ஆராய விசாரணை நடத்தப்படும் என்று சந்திரிகா தெரிவித்திருக்கிறார். ரஷ்ய ஆயுத ஒப்பந்தத்தின் போது பத்து வீதப் பணம் முன்னெப்போதுமில்லாதவாறு முதலிலேயே செலுத்தபட்டிருக்கிறது. முன்னர் எயர்பஸ் வாங்கும் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும் என்று தேர்தல் வாக்குறுதியில் சுதந்திரக் கட்சி தெரிவித்த போதிலும் தற்போது சர்வதேச கடப்பாடுகள் காரணமாக அதை ரத்துச் செய்ய முடியாது என்று விமானத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்திருக்கிறார்.

## ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க தனது அரசு ஆதரவு தருவதாக அரசியலமைப்பு அமைச்சர் லக்ஸ்மன் பீரிஸ் தெரிவித்திருக்கிறார். தேர்தலில் உறுதியளித்தபடி தனி மனிதரின் கையில் அதிகளவு அதிகாரங்கள் இருப்பதால் அந்த முறையை ஒழிக்க இருப்பதாக அரசு தெரிவித்தது. தற்போதைய ஜனாதிபதி முறைமையிலிருந்து பாராளுமன்ற முறைமைக்கு மாறுவதாக இருந்தாலும், அதற்காக பாராளுமன்ற முறையிலும் மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது என்று அரசியலமைப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

Blue Line Printing

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

1000
Flyers $21
Envelopes $35
Business Cards $30
Letterheads $25

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடவுள், கர்மா, ஜோசியம், மாந்தரீகம்

**3618511**

பரந்த மனமுள்ள ஆத்திகனும் திறந்த பார்வையுள்ள நாத்திகனும் அதிகம் முரண்பட அவசியமில்லை. நம்மைச் சூழவுள்ள அற்புதமான உலகையும் அதன் வியப்புக்குரிய நுண்ணிய இயக்கங்களையும் விளக்க கடவுட் கொள்கையாற் சாத்தியமில்லை. எனவே கடவுள் என ஒன்று இருக்க இடமில்லை என்பது நாத்திகத்தின் அடிப்படை. வரட்டு நாத்திகத்தின் பகுத்தறிவு ஞானமற்றது. குருட்டுத்தனமான மத நம்பிக்கையும் சாத்தியமான ஒரு விஷயமே. கடவுள் இருப்பதையோ இல்லாததையோ எவரும் நிருபிக்க முடியாது. ஏனெனில் இவ் விஷயம் மிகவும் அகச்சார்பான ஒன்று. எவ்வாறுயினும், எல்லாம் வல்ல கடவுள் என்ற கோட்பாட்டிற்கும் கர்மா என்ற கோட்டுப்பாட்டுக்கு மிடையில் ஒரு சிறுமுரண்பாடு உண்டு. கடவுளே அனைத்தையும் நிர்ணயிக்கும் சக்தியாயின் கர்மா என்ற கோட்பாடு அர்த்தமற்றது. தர்மவினையே நமது இருப்பின் நிர்ணய சக்தி என்றுற் கடவுள் அதிற் குறுக்கிட முடியாது.

நமது விதியை நிர்ணயிக்கும் கடவுளையோ கடவுளரையோ மகிழ்வூட்டிக் காரியங்களைச் செய்யலாமென்ற நம்பிக்கை எல்லாமறியவல்ல ஒரு இறையின் அறிவாற்றலைக் கேள்விக்கு உட்படுத்துகிறது. கடவுளோ கர்மாவோ நமக்கு விதித்ததை அறியவும் மாற்றவும் நமக்கு இயலும் என்று நம்புவோர் உண்மையிற் கடவுட் கொள்கைக்கும் கர்மா என்ற கோட்பாட்டுக்கும் மாறாகவே செயற்படுகின்றனர்.

எல்லாம் வல்லவரும் மானுடரை நேசிப்பவருமான ஒரு கடவுளை வலியுறுத்தும் உலகப் பெருமதங்களில் இரண்டான கிறிஸ்துவம் இஸ்லாமும் ஜோஸியத்தை முற்றாகவே நிராகரிக்கின்றன. தீவினைகள் சைத்தானுடைய ஏவலால நிகழ்கின்றதென நம்புமிடத்து இறையினுடைய துணையைச் சிலர் நாடுவதுண்டு. ஆயினும் மாந்தரிகத்துக்கு இந்த இரண்டு மதங்களிலும் அதிகம் செல்வாக்கு இல்லை.

ஜோசியமும் மாந்தரீகமும் மனிதருடைய ஆதி சமுதாயங்களில் இயற்கையின்பால் இருந்த அச்சமும் வாழ்வு பற்றிய நிச்சமின்மையும் காரணமாக எழுந்தவை பல இடங்களில் மாந்தரீகம் மருத்துவத்துடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. மூலிகைகள் மட்டுமன்றி அவற்றைச் செவ்வனே பயன்படுத்தும் மருத்துவரும் மந்திரசக்தியுடையோராக் கருதப்பட்டனர். இது மனித சமுதாயத்தின் விருத்தியின் பகுதிகள். இரண்டு துறைகளுமே விஞ்ஞானத்துக்கு முரணானவை. மருத்துவம் ஒரு விஞ்ஞானமாக விருத்தியடைந்து வந்த சூழலில் மாந்தரீகம் செல்வாக்கிழந்தது. அதன் விளைவுகளிற் துரதிர்ஷ்டமான ஒன்று மாந்தரிகத்தின் இருந்த நடைமுறை சார்ந்த பல தகவல்களும் மரபு சார்ந்த நல்ல அனுபவங்களும் இழக்கப்பட்டுவிட்டன.

ஜோஸியம் என்பது நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளது. சகுனங்கள் பற்றிய நம்பிக்கைகள் பரவலாகவே பல சமுதாயங்களிலும் இருந்து வந்துள்ளன. மூட நம்பிக்கைகளென நாம் இன்று நிராகரிக்கும் பல விஷயங்கள் நடைமுறையிலிருந்து எழுந்தவையே. நடைமுறையிற் கிட்டும் அனுபவங்களைச் சரியாகக் கிரகிக்காமல் நாம்மேலோட்டமாகசில முடிவுகட்கு வரமுடியும். சரியான முடிவுகளைக் கூட அவற்றுக்குரிய சூழலுக்கு வெளியே பிரயோகிக்கும் போது அவை தவறான விளைவுகளைத் தரக்கூடும். சடங்கு சம்பிரதாயங்களும் காலப்போக்கில் அவற்றின் நடைமுறையின் சாராம்ஸத்தை இழந்து வெறுங் குறியீடுகளாகவோ அல்லது அர்த்தமற்ற செயல்களாகவோ இழிந்து விடலாம். எனினும் இவையனைத்துக்கும் ஓரளவு பயன்பாடு எப்போதுமே இருந்துள்ளது.

இன்னல்கள் மத்தியில் வழிதெரியாத ஒரு நிலையில் அல்லது மிகுந்த மனக்குழப்பத்தின் மத்தியில் மனிதருக்கு ஆறுதல் தரவோ கொடுமையான யதார்த்ததினின்று தப்பியோடவோ ஜோஸ்யமும் மாந்தரிகமும் மனிதருக்கு உதவுவதுண்டு. ஆயினும் இவை உண்மையான பிரச்சனைக்குத் தீர்வுகளல்ல. இவற்றையே தஞ்சமடைந்து தமது முடிவுகளை எல்லாம் ஜோஸியர்களது ஆலோசனைகளின் அடிப்படையிலும் மாந்திரிகத்தின் மீது நம்பிக்கை வைத்தும் எடுப்போர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள். போதைப் பொருட்களை சில சமயம் சார்ந்து வாழ்வது தற்கொலைக்கு நேரானது.

இந்து மதத்தின் (அல்லது மதங்களின்) வரலாற்றுத் தன்மை அதன் தத்துவத்தின் ஆழமான அம்சங்களையும் சமுதாய நடைமுறையின் பலவேறு அம்சங்களையும் குழப்பிக் கொள்ளும் நிலைமையை உருவாக்கியுள்ளது. பெண்ணடிமைத்தனம் சாதியம் போன்ற கொடுமைகளும் மதத்தின் பேரால் நியாயப்படுத்தப்படுகின்றன. பொதுவாக சகிப்புத்தன்மை மிக்க அதன் வரலாறு இன்று இந்துத்துவ மதவெறியர்களால் களங்கப் படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்து இந்து மதத்தின் சிறப்பான ஒரு கால கட்டம் பக்தி இயக்கம் தொடர்பானது. அங்கே இறை மீதான நம்பிக்கையும் அன்பும் சாதியத்தை எதிர்த்து நின்றன. ஜோசிய நம்பிக்கை ஆதிக்கம் செலுத்திய ஒரு சமுதாயத்தில் பிறப்பால் பிராமணரான திருஞான சம்பந்தர், தானெடுத்த காரியத்தைச் செய்ய எடுத்த நாள் நல்லதல்ல என்று எச்சரிக்கப்பட்ட போது பாடிய கோளறு திருப்திகம் ஜோசியத்தை விட இறை நம்பிக்கையே வலியது என வலியுறுத்தியது.

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை
முடிமேலணிந்தென்
அகமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன்வெள்ளி
சனி பாம்பிரண்டினுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல
அடியாரவர்க்கு மிகவே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடவுளை மனதில் இருத்தின அடியார்கட்கு எல்லாக் கிரகங்களும் நல்லனவே என்பது அவரது கூற்று.

இவ்வாறே,

அருணகிரிநாதரும்

நாளென்செயும் வினைதானென் செயும் எனை நாடிவந்த

கோளென் செயும் கொடுங் கூற்றென்செயும்

குமரேசரிரு

நாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் பன்னிரு

தோளும் கடம்புமென்முன்னே வந்து தோன்றிடினே என்று கூறும் போது கடவுளை நம்பினோரை முன்செய்த வினையும் கிரக பலனும் மரணமும் ஒன்றும் செய்யாது என்று உணர்த்த முற்படுகிறார்.

நாம் கடவுளை நம்புகிறோமோ இல்லையோ. முழுமையான கடவுள் நம்பிக்கை கடவுள் பாரத்தைப்போட்டு விட்டு நல்ல காரியங்களை கடமையுணர்வுடனும் செய்யுமாறு தூண்டும். கர்மா என்ற ஒன்றை நம்புகிறவர் தனது நற்செயல்கள் மூலம் தனது எதிர்காலத்தை (அது மறு பிறவியாயன் அப் பிறவியை) உய்விக்க முனைவர். அந்த கிரகத்தின் குறுக்கீடும் அவரது கர்மாவை மாற்ற முடியாது. ஜோசியம் அவரது எதிர்காலத்தை அறிய உதவும் என வைத்துக்கொண்டாலும், அதைமாற்ற முடியாது. எனவே ஜோஸியம் பயனற்றது. கடவுளை முற்றுக நம்புகிறவருக்கும் ஜோஸியம் பயனற்றது ஏனெனில் கடவுள் நிர்ணயித்ததைக் கேள்விக்கு ட்படுத்தும் நோக்கம் அவருக்கு இல்லை.

நாத்திகர்கள் ஒருவேளை ஜோஸியத்தை நம்பலாமெனில், ஜோஸியத்துக்குப் பகுத்தறிவு சார்ந்த அடிப்படையில்லை. எனவே பெரும்பாலான நாத்திகர்கள் ஜோஸியத்தை நிராகரிக்கின்றனர்.

தங்களது அறிவினதும் அனுபவத்தினதும் அடிப்படையிலோ முழுமையான இறை நம்பிக்கையின் அடிப்படையிலோ செயற்பட இயலாது தத்தளிக்கும் ஒரு மனநிலையே பல விதமான ஜோஸியர்கட்டு வாய்ப்பாகி விடுகிறது. நமது சலனமும் நிச்சயமின்மையும் இன்னொருவருக்கு லாபமாகி விடுகின்றன.

இந்த இடத்தில், ஜோசியத்தை விடக் கெடுதலான ஒன்று பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அற்புதங்களை நிகழத்துவதற்காக இறைவனிடம் லைஸென்ஸ் பெற்று வந்தவர்களாகத் தம்மை விளம்பரப் படுத்திக்கொண்டு திரிகிறவர்கள் சமூகத்திற்குத் தீங்கானவர்கள். இவர்கள், வெள்ளையுடுத்தாலும் கறுப்பு உடுத்தாலும் காவியுடுத்தாலும், செய்கிறது ஒரே காரியம் தான். மனிதர்களது இயலாமையை மூலதனமாக்கிப் பணத்தையும் அதிகாரத்தையும் தம்மிடம் திரட்டிக் கொள்கிறார்கள்.

புத்தரோ யேசுவோ நபிகளோ நாயன்மாரோ அற்புதங்கள் செய்தார்களோ இல்லையோ என்று எனக்குத் தெரியாது. அவர்களது மேன்மை அவர்களது அற்புதங்கள் எனச் சொல்லப்படும் விஷயங்களில் இல்லை. மானுடத்தை உய்விக்க அவர்கள் சொன்ன அரிய கருத்துக்களிலும் எளிமையான நேர்மையான செயல்களிலுமே அவர்கள் சிறக்கின்றனர். அவர்கள் யாருமே தம்மை அற்புதம் செய்வோராக விளம்பரம் செய்து உலாவவில்லை புத்தர் செய்த ஒரு 'அற்புதம்' எல்லா அற்புதங்களையும் விட மேலானது.

செத்த பிள்ளையை உயிர்ப்பித்துத் தருமாறு புத்தரை நாடிய ஒரு பெண்ணிடம் சா நிகழாத வீட்டிலிருந்து ஒரு பிடி எள் கொண்டு வருமாறு சொல்லிச் சாவின் இயல்பான தன்மையை உணர்த்திய அவரது போதனை மிகவும் போற்றுதற்குரியது.

# தத்துவம்

# நன்னம்பிக்கை

தரணியில் எவர்மீதான
நம்பிக்கையும் நிரந்தரமானதல்ல!
உனது இரகசியங்கள்
எவருக்குச் சொல்லப்படக்
கூடியவை?
சினேகிதனுக்கு எனில்
அலட்டிக்கொள்ளாதே உன்னிடம்
இரகசியங்கள் இல்லை.
நண்பனுக்கு எனில்: நீ
யாரையும் எளிதில் நம்பக்
கூடியவன்.
இரகசியம் என்பதன் அர்த்தம்
என்னவென்று தெரிந்திருக்காமல்,
அதா இதா எனத் தத்தளிக்கிறாய்.
நண்பன் உனக்கு
மட்டுந்தான் நட்பாய் இருக்க
வேண்டிய நியதி ஏதுமில்லையே.
அவனுக்கு நட்பிலும் வலுவான
உறவாய் மனைவி வரலாமன்றோ.
அந்த வலுவான துணை
உனக்கும் வரலாம்தானே!
உன் மனைவி அல்லது
மனைவியாய் வரப் போகிறவளின்
மீதான நம்பிக்கையின் உத்தரவாதம்
அவளிடம் மட்டுமல்ல. உன்னிலும்
தங்கியிருக்கின்றது. இவை உறுதி
செய்யப்பட்டால் நீ நல்லதொரு
சம்சாரி. உன் இரகசியங்களை
அவளின் பாதுகாப்பில் வை.
நீ எவரையும் நம்பாவிடில் நீ
ஒரு பக்காப் பிரமச்சாரி. உன்
இரகசியங்களை உன்னுடனேயே
வைத்திருந்து கட்டி அழு.
எல்லாம் விட்டு, நீ உன்னை
மட்டும் நம்பினால், நீ நாத்திகன்—
உனக்குள் இரகசியங்கள் மட்டுமே
சொத்து.
இங்கு இல்லாத எவரையோ
நம்பினால் நீ, ஆத்திகன். —உனது
இரகசியங்கள் அந்தக் கல்லில் பட்டு
தெறித்திருக்குமே! —அவை எங்கும்
போயிருக்காது. உங்கு
எங்காயினும் அலையும்.
மனது கொஞ்சத்துக்கு
இலேசாகி இருக்கும் (
கொஞ்சத்துக்குத் தான்!)
ஒரு இரகசியம் உனக்கு: இரகசிய
வேர்கள் இன்னும் இருக்கும்.
எல்லாத்தையும் விடு!
நீ எங்கெல்லாமோ அடிபட்டு,
கடிபட்டு வந்திருந்தால், உன்னிடம்
இரகசியங்கள் ஏதும்
மிச்சமிருக்காதே அதையெல்லாம்
செலவழித்திருப்பாய்— இப்போ நீ
ஞானி, என்னைப் போல!

**கோவணாண்டியார்**

(குறிப்பு:இவர் முற்றிலும் துறந்த ஞானி அல்ல ஏனெனில் இன்னும் இவருக்கு கோவணத்திலாவது இருக்கிறதே, பாருங்கள், பற்று.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நகரின் மத்தியில் தனித்துவமான
ஓர் உணவுச் சேவை

# UNIQUE CATERERS

**Caterers of Sri Lankan, West Indian, Chinese and Canadian Cuisine**

31 PASSMORE AVE, UNIT 16
SCARBOROUGH, ONT M1V 4T8
TEL:(416) 292 3535

திருமண வைபவங்கள், பிறந்த நாள் விழாக்கள் போன்ற அனைத்து வைபவங்களுக்கும் சகல விதமான உணவு வகைகளும் முழுச் சேவையுடன் தரத்துடன் வழங்குகிறோர்கள

**Other Services:**
Party Hall Arrangement
Linen, Flower Arrangements
Cutlery, Warmers
D.J Service, Bartenders
Uniform staff, Decorations

Food Prepared By Qualified Chefs
Experienced in All Kind of Foods
Trade & Vendor Inquires Welcome

Give Us A Call
We Will Look After All Your Party
& Other Unique Needs

**Contact:**
Herlyn Selvanayagam
416-299-3203
Merlyn Selvanayagam
416-498-7481

**Our Specialities:**
**Sri Lankan Style:**
Rice Curries (Veg & Non Veg)
All kinds of Buriyani, Fried Rice
Kothu Rotti, String hoppers
**West Indian Style:**
All kinds of Fried Rice
Roti & Curry, Dhal Puri
**Also Canadian & Chinese dishes**
Deserts: Your Choice
We also equipped to supply
10-1000 pieces of Short eats
(Appetizers) patties, Rolls, Cutlets etc



# NATIONWIDE CONSULTANTS

AUT O INSURANCE
ACCIDENT CASES
REJECTED CASES
LOW PAYMENT
MUL TI CAR DISCOUNT
INSURANCE FOR
YOUNG DRIVERS
All TRAFFIC TICKETS

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளுக்கும், வாகன போக்குவரத்து சட்ட மீறல் டிக்கட்டுக்களுக்கும் எங்களை நாடுங்கள்

விசாக்கள் பெறுவதில் சிரமமா?
குறிப்பாக இந்திய விசா
பெறுவதில் தாமதமா?
அகதிக் கோரிக்கை
நிராகரிக்கப்பட்டதா?
சகல குடிவரவு விசாரணை
தேவைகளுக்கும் தொடர்பு
கொள்ளுங்கள்

Visitor Visas
Refugee Claims
Rejected Cases
Business Visa
Assisted Classes

CALL
SHAN
321 1311
740-SHAN
BY APPOINTMENTS ONLY




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை




- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**TEL:(416) 750 9969**
**FAX:(416) 750-9967**
**2155 LAWRENCE AVE EAST, SUITE 10**
**(AT BIRCHMOUNT), SCARBOROUGH**
- **WHEEL CHAIR ACCESS**
- **FREE PARKING**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**MONDAY-SATURDAY**
**9 AM-9 PM**
**SUNDAYS**
**12 NOON-5 PM**
**SUNDAY BY APPOINTMENT ONLY**
**24 HRS EMERGENCY SERVICE**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் பிரபாகரன் அறிவிப்பு

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்று பிரபாகரன் அறிவித்துள்ளார். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்று அரசு விடுத்த கோரிக்கையை பிரபாகரன் ஏற்றுக் கொண்டுள்ளதாக பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் சில கிழமைகள் அல்லது மாதங்களுக்குள பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்திருக்கிறார்.

பிரபாகரன் விடுத்த அறிக்கை ஒன்றில் 'யுத்த நிறுத்தத்திற்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் தமது இயக்கம் தயாராக உள்ளது' என்று தெரிவித்திருக்கிறார். பிரபாகரனின் இந்த அறிக்கையை பாலசிங்கம் பத்துப் பொலிசார் விடுவிக்கப்பட்ட போது நடத்தப்பட்ட வைபவத்தில் வாசித்தார்.

பொருளாதாரத் தடை பகுதியாக நீக்கப்பட்டதற்கு பதிலாகவே இந்த பொலிசார் விடுவிக்கப்பட்டதாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட தேவையான சமாதானமும் வழமையான நிலைமையும் உருவாக்கப்பட்ட புதிய அரசுடன் ஒத்துழைக்கதாம் தயாராய் இருப்பதாகவும் பிரபாகரன் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

அத்துடன் இந்த கைதிகளை விடுவித்தது ஒரு மாற்றீடான நல்லெண்ண சமிக்ஞையாகவும் புரிந்துணர்வாகவும் கருதப்பட வேண்டும் என்றே நாம் நம்புகிறோம் என்றும் வடக்கு மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை அநீதியானதும் மனிதாபிமானமற்றதும் என்றும் தமிழ் பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்புவதற்கு வசதியாக முழுமையாக தடை நீக்கப்படும் என்று நாம் நம்புகிறோம் என்றும் அவர் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொலிசார் விடுவிக்கப்பட்டதற்கு பதிலாக தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள புலிகள் சிலரை விடுவிப்பது பற்றி கருத்துக்கெடுப்பதாக பாதுகாப்பு உதவி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

ஆயினும் ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை பேச்சுவார்த்தைகள் நடைபெறாது என்றே ஆய்வாளர்கள் கருத்து கூறியுள்ளனர். இரு தரப்பினரும் நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டலாமே ஒழிய, உடனடியாக பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு சந்தர்ப்பம் குறைவு என்று கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விரிவுரையாளர் ஜயதேவா உயாங்கொட தெரிவித்துள்ளார். இன்னொரு ஆய்வாளரின் கருத்துப்படி அரசு மேலும் தடைகளைத் தளர்த்த புலிகள் மேலும் பணயக் கைதிகளை விடுவிப்பார்கள். இதன் பின்னர் இரு தரப்பின் பிரதிநிதிகளும் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் செல்வர்.

## விடுவிக்கப்பட்ட பொலிசார் கொழும்பு வந்தனர்

புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிசார் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டனர். இவர்கள் சனிக்கிழமை கொழும்புக்கு விமானம் மூலம் கொண்டு வரப்பட்ட போது சுமார் 150க்கும் மேற்பட்ட உறவினர்கள் அவர்களை வரவேற்றனர்.

விடுவிக்கப்பட்ட பொலிசார் ஒருவர் தனது வைத்தியசாலைப் படுக்கையில் இருந்தவாறே தங்களை சரணடையும்படி கட்டளையிட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். நான்கு வருடங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட இவர் தானும் மற்றும் 28 பேரும் புலிகளிடம் சரணடையுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

90ம் ஆண்டு நடந்த இந்த சம்பவம் பற்றி விசாரிக்க வேண்டும் என்று லிண்டன் தர்மபால என்ற

14ம் பக்கம் பார்க்க..

## பேச்சுவார்த்தை முறிந்தால் இராணுவ நடவடிக்கை

### ரத்வத்தை இராணுவத்திடம் உறுதி

இந்த வார இறுதியில் துருப்புகளைச் சந்தித்த அனுருத்த ரத்வத்தையின் கருத்துக்கள் இறுக்கமானவையாக காணப்படுகின்றன. பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்தால் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள தயங்க மாட்டாது என்று அவர் தெரிவித்தார். சந்திரிகாவும் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த இராணுவத்தின் கருத்துக்கள் பற்றி தெரிந்திருந்தார் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த வாரம் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்த அவர் முன்னைய நிலை போன்று எந்த விதமான இரகசியப் பேச்சுவார்த்தைகளும் நடைபெறாது என்றும் பிரச்சனையைத் தீர்க்க எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கை கயிலும் இராணுவத்தின் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் சந்திரிகா தெரிவித்திருந்தார்.

அத்துடன் பேச்சுவார்த்தையின் போது முகாம்கள் மூடப்படாது என்றும் நிலம் விட்டுக் கொடுக்கப்பட மாட்டாது என்றும் ரத்வத்தை தெரிவித்தார். 'நாங்கள் எங்கள் தற்போதைய நிலையிலிருந்தே பேச்சுவார்த்தை நடத்துவோம். நாங்கள் பழைய தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டுள்ளோம்' என்றார் அவர்.

முன்னைய சமாதான நேரத்தில் புலிகள் பிரேமதாசாவின் உதவி மூலம் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு மீண்டும் பிரேமதாசாவுக்கு எதிராக தங்கள் துப்பாக்கிகளைத் திருப்பி சம்பவம் மீள நடைபெறாது என்று துருப்புகளுக்கு ரத்வத்தை உறுதியளித்தார்.

நாட்டைப் பிரிக்க மாட்டோம் என்று கூறிய ரத்வத்தை 'இலங்கை ஒரே நாடாகவே இருக்கும். ஆனால் பேச்சுவார்த்தை மூலம் அதிகாரப் பரவலாக்கத்திற்கான ஒரு அமைப்பை கண்டு, அதை அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்களா என்று பார்ப்போம். எவ்வளவு அதிகாரத்தை அவர்களுக்கு கொடுக்க முடியும் என்பதை நாங்கள் கருத்துக்கெடுப்போம்' என்றும் அவர் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தவளை தண்ணீரில் தாழுமோ?

**செல்வம்**

சென்ற சனி மாலை ரொறன்ரோ தமிழ் நாடகப் பிரியர்களை அவைக்காற்றுக் கழகம் (லண்டன்) ஐந்து நாடகங்களை மேடையேற்றி பரவசத்தில் ஆழ்த்தியது.

இங்கு எழுதப்படுவது அந்நாடகங்களைப் பற்றிய விமர்சனம் அல்ல. அடுத்தநாள் ஞாயிறு மாலை நடந்த கருத்தரங்கம் பற்றியது.

ஏறத்தாழ ஒரு பட்டறை போல் இதைப் பயன்படுத்தலாம் என்று வந்த பலரை சிலர் ஏமாற்றினார்கள். தொடங்கியவுடனேயே சம காலம் வந்துவிட்டது. என்ன சமர்காலமோ?

இங்கு (கனடாவில்) போட்ட நாடகங்கள் பற்றியோ அல்லது அவை தரங் குறைந்தது என்றோ யாரும் முன் பேசியது இல்லை. பிறகென்ன இந்த தாழ்வுச் சிக்கல்.

ஆறுபேர் லண்டனில் இருந்து பணம் செலவழித்து நேரம் செலவழித்து வந்து அற்புதங்கள் செய்தார்கள். அவை பற்றி தான் பேசியிருக்க வேண்டும். அதில் தான் கேள்விகள் எழுந்திருக்க வேண்டும். அல்லாவிடில் இவைகளை விட சிறப்பாக முன்பே நாங்கள் இங்கு நாடகங்கள் செய்து போட்டோம் என்று நிருபித்து பேசியிருக்க வேண்டும். இங்கு இப்படியான அருமையான சந்தர்ப்பங்களை வீணடிப்பது இதுதான் முதல் தடவையல்ல.

மன்னிப்பு நாடகத்தில் நாயகி அடிக்கடி தவளை தண்ணீருக்குள் தாழுமோ என்று சொன்னது போல் சமகாலம் சமகாலம் என்று கூறியது பெரும் அறுப்பாய் இருந்தது.

அந்த நாடகங்கள் இன்றைய மனிதனின் பிரச்சனைகளை சொல்லவில்லையா? வாழ்வின் துக்கத்தை வெளிக்காட்டவில்லையா – சீவியத்தின் சிக்கல்களை புரிய வைக்கவில்லையா?

கேள்வியையும் கேட்டு பதிலையும் சொல்ல இது பாடப் புத்தகமல்ல, கலைவடிவங்கள். இது புரியவில்லையா? புரிந்தும் புரியாத நடிப்பா?

எல்லோருக்கும் எல்லாம் தெரிய வேணும் என்று அல்ல, தெரியாவிட்டால் தெரிய முயற்சிக்க வேண்டும், இதெல்லாம் வீண்வேலையென்றால் இப்படியானவைகளைத் தவிர்க்க வேண்டும். ஆனந்த் பிரசாத்தின் வார்த்தைகளில் சொல்வது என்றால் எழுதுமட்டுவாளையும் எரித்தியாவையும் போட்டுக் குழப்பக்கூடாது.

மைக்கைக் கண்டால் ஏன் தான் இப்படி உணாசசி வசபபடுகின்றாகளோ தெரியாது. சம்பந்தமில்லாப் பேச்சுக்கள். அடிக்கடி பு. தமிழர்கள் பு. தமிழர்கள் (அது தான் புலம் பெயர்ந்த தமிழர்கள்) இது ஒரு வசதிக்காகத்தான் சொல்கின்றார்கள். கனடா தமிழர்கள், இங்கிலன்ட் தமிழர்கள், பிரான்ஸ் தமிழர்கள் என்று மாறிவிடும். யாழ்ப்பாணத்தில் எழுத்தாளர் சாந்தன் சொன்னாராம் புலம்பெயர்ந்த இலக்கியம், புலம்பல் இலக்கியம் என்று.

பாலேந்திராவின் மன்னிப்பு நாடகத்தை பார்த்திருந்தால் அவர் கருத்தில் மாற்றம் வரலாம்.

சில நண்பர்கள் கருத்தரங்கை கேள்விகளால் ஒழுங்குக்கு கொண்டு வரமுயற்சித்தார்கள். பசி நாடகம் பற்றி பல விசாரணைகள் இருந்தன.

## விடுவிக்கப்பட்ட...

பொலிசார் ஏன் தங்களைச் சரணடையுமாறு தெரிவிக்கப்பட்டது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். 'பிடிக்கப்பட்ட முதல் ஏழு மாதங்களும் நாம் கடுமையாக துன்பப்பட்டோம். செஞ்சிலுவைச் சங்கத்தினர் வந்த பின்பே எங்களை நன்றாக கவனித்தார்கள். கொழும்புக்கு வருவதற்கு அவர்கள் புதிய உடைகளும் சப்பாத்துக்களும் கூடத் தந்தார்கள்' என்று அவர் தனது பெற்றோர், உறவினர்களுடன் கலந்து கொண்ட போது தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா மற்றும் உயர் அதிகாரிகள் இவர்களை வரவேற்க விமான நிலையம் வந்திருந்தனர். குடும்பத்தினரைச் சந்தித்த பின்னர் பத்துப் பேர் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

மற்ற 19 பேரும் விடுவிக்கப்படுவார்கள் எனத் தாம் நம்புவதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

முழுமையாக பொருளாதாரத் தடை நீக்கப்பட்டால் முழுப் பொலிசாரும் இராணுவத்தினரும் விடுதலை செய்யப்படுவார்கள் என புலிகள் தெரிவித்ததாக விடுதலை செய்யப்பட்டவர்கள் கூறியுள்ளார்கள்.

## ஜனாதிபதி தேர்தலில் காமினி

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசநாயக்கவே ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடுவார் என்று சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது. முன்பு விஜேதுங்கவே போட்டியிடுவதாக இருந்த போதும் தற்போதைய சூழ்நிலையில் அவர் போட்டியிடுவதை விரும்பவில்லை என்று சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

தொண்டமான் பொதுஜன முன்னணிக்கு தனது ஆதரவை மாற்றிக் கொள்ளும் பட்சத்தில் தோல்வியைத் தழுவ வேண்டி ஏற்படலாம் என்ற கருத்து விஜேதுங்கவிடம் இருபபதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த தேர்தலில் ஐ.தே.கட்சி 44 வீத வாக்குகளையே பெற்றது. இதில் மலையகத்தில் பெற்ற தொண்டமானின் ஆதரவு வாக்குகளும் அடங்கும்.

இந்த மாத இறுதியில் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும்படி கோரப்படலாம்.

## வடக்குக்கு அவசர நிலை

அவ்சரகால நிலைமை நாடு முழுவதும் நீக்கப்பட்டு வடக்கு கிழக்குக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட உள்ளது. இந்த வாரத்துடன் முடிவடைவதாக இருந்த இந்த அவசர நிலைமை தேர்தலுக்காக அமுலாக்கப்பட்டிருந்தது. சந்திரிகாவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி வடக்கு கிழக்குக்கு மட்டுமே அவசர நிலைமையை மட்டுப்படுத்துகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவர் அது பற்றி பாலேந்திராவிடம் கேட்டபோது அவர் நாடகம் தான் தன் ஊடகம்.... "ஏதாவதொன்றில் தொங்கிக் கொண்டுதான் நிற்க வேண்டும். தேசமென்றும் பாசையென்றும், மதமென்றும்" என்று சில விளக்கங்களையும் சொன்னார். கேள்வி கேட்டவரே கைதட்டி பதிலை ஏற்றுக் கொண்டார்.

சிலருடைய பேச்சைக் கேட்டு பாலேந்திராவைப் பார்த்த போது பாவமாய் இருந்தது.

எது எப்படியிருந்தாலும் நாடகத்திற்கு நூற்றுக்கணக்கானோர் வந்தார்கள். அமைதியாக இருந்து ரசித்தார்கள் பலர் பாராட்டினார்கள். இது எராளரோவில பெரிய வெற்றி.

தமிழில் நாடகம் தான் பின்பு சினிமாவாக வந்தது. நாடகம் வேறு, சினிமா வேறு, தமிழில் எத்தனையோ பிழைகள் நடந்தன. அதில் இதுவும் ஒன்று. ஐம்பது வருட சினிமாவில் நல்ல படங்கள் கைக்குள் அடங்கும் தமிழில் நாடகம் இல்லையென்று ஒரு குற்றச்சாட்டை தார்சீயசும் பாலேந்திராவும் பொய்யாக்குவார்கள்

உலகமே ஒரு நாடக மேடை என்று சேக்ஸ்பியர் சொன்னார். எந்த நாடகம் மனிதனை கலைரீதியாக அணுகி தன்னைத்தானே கலாபூர்வமாக அவனை கேள்விக்குள்ளாக்கி விசாரிப்புகளை உண்டாக்குதோ அவைகள் நல்ல நாடகங்கள். அவைக்காற்றுக் கழகத்தினது இங்கு பெரிய வெற்றி.

எங்களையெல்லாம் இந்த நாடகங்களை பார்க்க உதவி செய்த சிறிஸ்கந்தனுக்கும் மாயவனுக்கும் பாராட்டுக்களும் நன்றியும்

# தலைவிதி

தேர்தல் ஒருவாறு ஒப்பேறிவிட்டது. எதிர் பார்த்த சில காரியங்கள் நடைபெறவில்லை. அரச சாசனத்தை திருத்தி எழுதுவதற்குச் சாதகமாக சந்திரிகா கட்சிக்கு மூன்றிலிரண்டு ஆசனங்கள் கிடைக்கவில்லை.

புலிகளினால் ஏனைய தமிழ்க் குழுக்கள் மீது தேர்தலுக்கு முன்னே பின்னே வன்முறை பிரயோகிக்கப் படவில்லை.

சிங்களப் பகுதிகளில் தேர்தலுக்கு பின்னான வழக்கமான கலவரங்கள் ஏதும் நிகழவில்லை. மொத்தத்தில் எல்லாமே வெற்றி! எல்லோருக்கும் வெற்றி! சிங்கள அரசுகள் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையினின்றும் நாம் விடுபட்டுப் போய் வெகு காலங்கள். சந்திரிகா அரசும் ஆட்சிக்கு வந்ததும் எப்படி நடந்து கொள்ளப் போகிறது என்று தெரிந்து கொள்வதற்கு முன் அதற்குப் பெரும்பான்மை பலத்தைக் கொடுப்பது புத்திசாலித் தனமானதுமல்ல. ஜனாதிபதி தேர்தல் முடியும் வரையிலாவது சந்திரிகா அரசின் நடைமுறைகளைக் கவனித்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழர் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் கையில் அரசின் தக்கலை நிர்ணயிக்கும் உரிமை வழங்கப் பட்டிருப்பது சந்திரிகா அரசுக்கு கடிவாளமிட்டது மாதிரி. தமிழ்க் குழுக்கள் தேர்தலில் நிற்பதையோ வெல்வதையோ சிறிய எச்சரிப்புக்களுடன் கண்டும் காணாது விட்டது புலிகளின் ராஜதந்திரமாகத் தான் இருக்க வேண்டும். எந்த அரசாக இருந்தாலும் கடிவாளம் தமிழர் கையில் இருக்கட்டுமே என்ற நினைப்பாகவுமிருக்கலாம். அப்படியாயின் புலிகள் தரப்பில் அது ஒரு பாரிய பரிணாம வளர்ச்சி.

தமிழர் மற்றும் சிறுபான்மைக் குழுக்கள் அரசியல் சதுரங்கத்தை முடக்க நிலையில் வைத்திருக்கும் போது புலிகள் தங்கள் நிர்வாகப் பரவலாக்கத்தைத் தங்கு தடையின்றி செய்து கொள்ள நல்ல சந்தர்ப்பம். அதனால் அவர்களுக்கும் வெற்றி.

இராணுவம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் இன்னும் ஜனாதிபதி கைகளிலேயே இருப்பதனால் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் கையாள்வதில் சந்திரிகா– விஜயதுங்கா இழுபறி நலிந்த தமிழர்களுக்கு ஒரு இடைவேளையைப் பெற்றுக் கொடுக்கும். அதனால் தமிழருக்கும் வெற்றி. தொண்டமான் முழு தமிழர் சம்பந்தமான விடயங்களில் நடுநிலையாக வாக்களிப்பதற்காகச் சொல்லியிருக்கிறார். அது உண்மையானால் தமிழருக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அரசுக்கு




நிறைய நெருக்கடிகள் இருக்கும். அந்த வகையிலும் தமிழருக்கு வெற்றி.

தெற்கில் இனத்துவேஷ சக்திகள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டிருப்பது சிங்கள மக்களிடையே எழுந்துள்ள யதார்த்த சிந்தனைகளுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. மக்கள் தீர்ப்பை மதித்து ஜனாதிபதி விஜயதுங்கா சந்திரிகாவிடம் ஆட்சியை ஒப்படைத்தது அவரின் பெருந்தன்மையோ அரசியல் சாணக்கியமோ அல்லது வெளிநாடுகளின் நிர்பந்தமோ காரணம் என்று சொல்லி விட்டாலும் ஜனநாயக மரபு காப்பாற்றப்பட்டதில் எல்லோருக்கும் வெற்றி ஆயுதங்களை எறிந்துவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பவேண்டும் என்ற மக்களின் ஆதங்கத்தை அனுசரிப்பதுபோல் தமிழ் ஆயுதக் குழுக்கள் மேடைகளில் சுட்டுக் கொள்ளாது திட்டிக் கொண்டதோடு நிறுத்திக் கொண்டது எதிர் காலத்தில் நம்பிக்கை வைத்துக் காத்திருக்கும் மக்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி.

சிறிய எண்ணிக்கையான வாக்குகளேயாயினும் தங்களைத் தெரிவு செய்ததன் மூலம் மக்களின் அங்கீகாரம் தங்களுக்கும் உண்டு என்ற நம்பிக்கையில் தமிழர் பிரதிநிதிகள் பாராளுமன்றம் போவதும் அவர்களுக்குக் கிடைத்த ஒரு வகையான வெற்றி தான்.

இவையெல்லாம் வெற்றிகள். இலங்கையின் சகல குடிகளிடமிருந்தும் பறித்துக் கொள்ளப்பட்ட ஜனநாயக சுதந்திரத்தை மீட்டெடுப்பதில் மக்கள் கண்ட ஆரம்ப வெற்றிகள். ஆனாலும் கூட போகும் தூரம் நிறைய இருக்கிறது. காணும் போர்களும் நிறையவே இருக்கின்றன. இருப்பினும் இவைகள் வெற்றிகள் தாம். இன, மத, தேச குரோதங்களால் தான் குறுகிய மனங்களினூடு பார்க்கின்ற 'அரசியல் அவதானிகளுக்கு' இவையெல்லாம் தோல்விகள். மாபெரும் தோல்விகள். சமன்பாட்டைச் சரி செய்வதற்கு இரண்டு பகுதிகளும் இருந்தேயாக வேண்டும். அது இயற்கை விதியோ, இயற்கையின் விதியோ நமக்கு மட்டும் தலைவிதி!

**சிவதாசன்**

## வீங்காத நினைவுகள்

இலண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் நகருக்கு வந்திருந்தார்கள். நாடக விழாவிற்காக. ஐந்து

19ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

**தமிழில்: நேசன்**

கார்ஸ்க்கி: ஹெறடேடர், ஜேர்மனிக்கு எதிரான போரில் எமது தோழர்கள் பலரை நாம் இழந்தோம், நாங்களும் ஜேர்மனியுடன் சமரசத்திற்குப் போகின்றோம்என்று நீ சொல்லுகின்றாய்.

ஹெறடேடர்: பெண்டகன் ஜேர்மனிக்கு எதிரானது என்று எனக்குத் தெரியும். உன் நிலைப்பாடு மிகவும் சாதகமான set up. ஹிட்லர் இல்லிரியா மீது படையெடுக்காதத்திற்கு றிஜெண்ட் செலுத்தினார்கள். ஆனால் நீ ரஷ்யாவுக்கு எதிரானவன். ரஷ்யா தொலையில் இருப்பதால் 'இல்லிரியா இல்லியருக்கு மட்டுமே' என்ற பாட்டை நீ இரண்டு வருடகாலமாகப் தேசிய பூர்ஷ்சுவாக்களுக்குப் படித்தாய். ஆனால் ரஷ்யப் படை இன்னும் ஓரிரு வருடகாலத்தில் எமக்கு அருகில் வந்துவிடும். அப்போது இல்லிரியா மட்டுமே என்று உன்னால் பாட முடியாது. இப்போது உனக்குள்ள சந்தர்ப்பம் எல்லாம் சமரசம் செய்யவேண்டியதுதான். நீ அவர்களோடு வேலை செய்வதாகவும் அதேவேளை றிஜெண்ட் இரட்டை வேடம் அடித்ததாகவும் கூறுவாய்.. ஆனால் அங்குதான் கஷ்டம் இருக்கின்றது. ஏனெனில் ரஷ்யர்கள் உன்னை நம்பப் போவதில்லை. அப்போது என்ன செய்வாய்? அவர்கள் என்ன செய்வார்கள்? அப்போது நாங்கள் அவர்களுக் கெதிராக போர் தொடுப்போம்.

இளவரசர்: அன்பான ஹெறடேடர், உண்மையிலேயே ரஷ்யர்கள் எம்மை அறியும் போது.....

ஹெறடேடர்: ஒரு பாசிச சர்வாதிகாரியும் ஒரு பிற்போக்குவாதக் கட்சியும் வெற்றி வரும் போது தம்முடன் இணைய வருகின்றார்கள் என்பதை அவர்கள் அறியும்போது அந்த சூழ்நிலை அழகாக இருக்கும் என நான் நம்பவில்லை. (மௌனம்) ஒரே ஒரு கட்சிதான் ரஷ்யாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது, ஒரே ஒரு கட்சிதான் இந்தப் போரின் போது தொடர்ச்சியாக ரஷ்யாவுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்தது ஒரே கட்சிதான் தனது ஆட்களை அதற்கு களத்தில் கொடுத்துதவியது. ஒரே ஒரு கட்சிதான் இந்தச் சிறு திட்டத்தை அமுல்படுத்த தகுதியானது. அது எங்கள் கட்சிதான். இங்கு ரஷ்யர்கள் வரும் போது எங்கள் கண்களோடுதான் அவர்கள் எல்லாவற்றையும் பார்ப்பார்கள் (மௌனம்) கனவான்களே நீங்கள் எங்கள் திட்டத்தின் படிதான் நடக்க வேண்டி வரும்

கார்ஸ்க்கி: நான் இங்கு வந்திருக்கவே கூடாது.

இளவரசன்: கார்ஸ்க்கி.

கார்ஸ்க்கி: எங்கள் நேர்மையான திட்டத்திற்கு உனது மறுமொழி ஓர் பிளாக்மெயில் ஆக இருக்கும் என்பதை நான் முதலே உணர்ந்திருக்கவேண்டும்

ஹெறடேடர்: நீ அடிபடப்பட பன்றி போல் அனுங்கினால் நான் அதைப் பொருட்படுத்தப்போவதில்லை ஆனால் ஒன்றை மட்டும் ஞாபகப்படுத்திக்கொள் சோவியத் படைகள் இங்கு வரும்போது நாங்கள் உங்களது ஆட்களும் எமது ஆட்களுமாகச் சேர்ந்து அதிகாரத்தையும் எடுத்துக் கொள்வோம். அதுவரை நாங்கள் இருவரும் ஒன்றாக வேலை செய்யலாம். ஆனால் யுத்தத்தின் முடிவில் எங்களுக்கிடையே ஓர் புரிந்துணர்வு வராவிட்டால் நாங்கள் தனியே அரசாங்கத்தை ஏற்போம். இதனை நீங்கள் இப்பவே தீர்மானிக்க வேண்டும்

கார்ஸ்க்கி: நான்

இளவரசன்: (கார்ஸ்க்கியிடம்) வன்செயல்களும் பலாத்காரமும் எம்மை எங்கும் இட்டுச் செல்லாது. நாம் புறச்சூழ்நிலையை யதார்த்தமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

கார்ஸ்க்கி: (இளவரசனைப்பார்த்து) நீர் ஒரு கோழை, உமது தலையைக் காக்க நீர் என்னை இந்த பொறியினுள் மாட்டப் பார்க்கின்றீர்.

ஹெறடேடர்: எது பொறி? உனக்குத் தேவையில்லை என்றால் நீ போகலாம். நானும் இளவரசரும் நீ இல்லாமலேயே உடன்பாடு செய்து கொள்வோம்.

கார்ஸ்க்கி: (இளவரசரிடம்) நீர்செய்வீரா?

இளவரசன்: ஏன் செய்யக்கூடாது? இந்த உடன்பாடு உனக்கு பொருத்தமாகக் காணப்படாவிடில் நீர் அதனை ஏற்கத் தேவையில்லை ஆனால் எனது தீர்மானம் உம்மிடம் தங்கியிருக்கத் தேவையில்லை.

ஹெறடேடர்: இந்த உடன்பாட்டின்படி எனது கட்சி றியெண்ட் அரசாங்கத்தை அதிகரிக்கும்போது அது இந்த போரின் இறுதி கட்டத்தில் பென்ரகனை மிகவும் ஓர் கஷ்டமான சூழ்நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை தான் உனக்கு சொல்லவேண்டியது இல்லை. அதே வேளை ஜேர்மனியர்கள் தோற்கடிக்கப்படும் போது பென்ரகனை நாம் முற்றாக அழிக்க நேரும் ஆனால் நீ இதற்கு மேலாக.....

கார்ஸ்க்கி: நாங்கள் எங்களது நாட்டின் விடுதலைக்காக 3 வருடங்கள் போரிட்டோம் ஆயிரத்திற்கும்மேற்பட்ட எமது பொடியன்கள் இந்த போராட்டத்தில் மடிந்துள்ளனர். நாங்கள் உலகின் மதிப்பையும் அதற்காகப் பெற்றும் உள்ளோம். இப்போது எங்கள் அனைத்தும் தியாகங்களும் வீணாகிவிட்டன. ஆக இப்ப ஜேர்மனி சார்பு கட்சியும் ரஷ்ய சார்புக் கட்சியும் சேர்ந்து எங்களை இருட்டு மலையில் வைத்து ஒழிக்கப்பார்க்கின்றனர்

ஹெறடேடர்: உணர்ச்சி வசப்படவேண்டாம் கார்ஸ்க்கி நீ தோற்கப் போகும் விளையாட்டில் தோற்றுப்போனாய் சக்தி வாய்ந்த வல்லரசுகளுக்கு மத்தியில் 'இல்லிரியாவும் இல்லியர்களும் மட்டுமே என்ற சுலோகம் எவ் வித பாதுகாப்பையும் தரப்போவதில்லை (மௌனம்) நீ எங்களது நிபந்தனைகளை ஏற்கப் போகின்றாயா இல்லையா?

கார்ஸ்க்கி: இதனை உடன் ஏற்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. இவ்வாறான முடிவுகளை நான் ஒருவனாக முடிவெடுப்பதில்லை.

ஹெறடேடர்: நேரம் என்பது எனக்கு நெருக்கமான ஓர் விடயம் கார்ஸ்க்கி.

இளவரசர்: அன்பான ஹெறடேடர் நாம் கார்ஸ்க்கிக்கு சற்றுநேரம் சிந்திக்க நேரம் கொடுப்போம் போர் இன்னும் முடியவில்லை அது அடுத்த கிழமையில் கூட முடிவடையப் போவதில்லை.

ஹெறடேடர்: நான் இன்னும் ஒரு கிழமையில் கொல்லப்படலாம் கார்ஸ்க்கி நான் உன்னை நம்புகின்றேன். கொள்கை அடிப்படையில் நான் மக்களை எப்போதும் நம்புபவன். நீ உனது சக நண்பர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்பதை நான் அறிவேன் அதேவேளை அவர்களை ஏற்கும்படி செய்யத்தூண்டும் திறனும் உனக்கு இருக்கின்றது என்பதை தான் அறிவேன். கொள்கையளவின் நீ இந் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் நான் நாளை எனது தோழர்களுடன் கதைக்கலாம்.

ஹிகோ: (கதிரையில் இருந்து துள்ளி எழுந்தபடி) ஹெறடேடர்

ஹெறடேடர்: இப்ப என்ன?

ஹிகோ: எப்படி உன்னால்........

ஹெறடேடர்: வாயை மூடு

தொடரும்

**தொடர் நாடகம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிழைத்த நெஞ்சம்

சிதம்பரம் ஞா.வடிவேலனர்

பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் கிராமச் சங்கம் கட்டி விட்ட பொதுக் கிணறு இப்ப குளிக்கத்தான் பயன்படுகிறது. இதுதான் முந்தி ஊர்சனங்களின் குடிநீர் பிரச்சனைக்கு நிவாரணியாய் இருந்தது. பிறகு ஊர் இரண்டுபட்டா கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்றது போல ஊர் பலதுபட கூத்தாடிகள் ஊருக்குள் தோன்றி கூத்தாட வெளிக்கிட அந்தக்கிணறு குடிப்பதற்குப் பயன்படுவது நின்று குளிப்பதற்குப் பயன்படத்தொடங்கியது. ஷம்பூ வந்த கையோட ஊர் வாலுகள் முதல் முதலாக அந்த கிணத்தை குளிக்கப் பயன் படுத்தினர். அவை குளிக்கிறதைக் கண்ட அவயிட சொந்தக்காற குமரிகள் குளிக்க வெளிக்கிட்டயும் பிறகு அவை குளிக்கிறயும் நாங்க ஏன் விடுவான் என்று ஊரில உள்ள அத்தனை பேரும் குளிக்கவெளிக்கிட்டு இப்ப அந்த நல்ல தண்ணி கிணறு குளியல் கிணருய் மாறிவிட்டது. இப்ப ஊர்சனம் நல்ல தண்ணி அள்ள அடுத்த ஊருக்கு நடந்து சென்று அள்ளியண்டு வாருர்கள். ஆனுல் அவர்கள் பலமைல் நடப்பதையிட்டு கவலைப்படவில்லை. தெருவில் நின்று குளிப்பதில் அப்படியொரு சந்தோசம் அவர்களுக்கு.

பரியாரி வையிரவன் அந்த ஊரிலேயே ஒரு ஆசாரமான மனிதன். அந்தப் பிள்ளையார் கோவிலக் கட்டினது இந்தப் பரியாரியிட பேரன்தானும். பெண் புரசுகள் இப்படி கோயிலுக்கு முன்ன நின்று குளிக்கிறது இந்த பரியாரி வைரவனுக்கு நெஞ்சுக்கு கொஞ்சம் கஸ்ரமாகத்தான் இருந்தது. எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவர்கள் திருந்திய பாடாயில்லை. கிழவன் முந்திச் சொன்ஞ ஊருக்க எடுபடும். இப்ப எடுபடுதிறதில்லை காரணம் கிழவன் முந்தி செய்வினை செய்யிறது. இப்ப விட்டிற்று. மனிசி செத்த கையோட அதை விட்டது. மனிசி செத்ததிற்கே தன்ர செய்வினைதான் காரணம் எண்டு கிழவன் சிலவேளையில இருந்து புலம்பும். தண்டல் காரன் மாணிக்கன்ர பெண்டிலுக்கு செய்ததுதான் என்னவோ பிழையால தன்ர மனிசியை அடிச்செண்டு போயிற்றது எண்டு கிழவன் புலம்பித்துடிக்கும். அன்று விட்டன் கொண்டலடி என்று கிழவன் அண்டைக்கே செய்வினை செய்யிறதை விட்டிற்று. கிழவன்ர கொள்ளு பேரன் தன்ர மனிசிக்கு பேயைத்தானும் வேலைக்கு வைச்சிருந்தது. எப்படியெண்டா ஒரு பேயை பிடித்து மந்திர தந்திரங்களால் மாற்றி பெண்ணுருவில் ஆக்கி வீட்டு வேலையளுக்குப் பயன்படுத்தியண்டு இருந்ததாம். அந்தக்கிழவன் தன்ர மனிசிக்கு அதைப் பேய் எண்டு சொல்லிக்குடுக்கேல. காரணம் மனிசி பயந்து போடும் என்று. ஒருநாள் கிழவன் வயலுக்குப் போயிற்று. இந்த பேய கிழவியிட்ட வந்து சொல்லியிருக்கு விறகு எடுத்துப் போகேக்க தலையில முட்கிழுவை குத்திற்று பார் எண்டு. கிழவியும் அதைக்கப் பதைக்கப் பார்த்தா தலையில ஒரு கட்டை இருந்திருக்கு, உடனே கிழவியும் முள்ளுத்தான் குத்திப் போட்டெண்டு நினைச்சு கட்டையை இழுக்க பேய் மறைஞ்சு போயிற்று. கிழவன் பேய்க்கு கட்டையை மண்டையில அறைஞ்சது பிறகு தான் கிழவிக்கு எல்லாம் தெரியும். அப்படி இந்த பரியாரியிட வங்கடம் எல்லாமே பேய்க் கூட்டத்தோட திரிஞ்சது தான். கொஞ்சக் காலமாய் புங்கும்பள்ள ரேட்டால ஒரு பேய் நடமாடியண்டு திரிஞ்சது, அதை என்னெண்டு மடக்கிறது எண்டு தெரியாம இருக்கேக்க இந்த பரியாரிக்கிழவன் தான் ஓடஓட விரட்டிக்கலைச்சது பிறகு ஊருக்க இந்த கிழவனக் கண்டவுடன் ஒரு பயபக்தி. பேந்து இந்தக் கிழவன்ர மனிசி செத்தவுடன் அந்த பயபத்தியெல்லாம் எங்கால போனதெண்டே தெரியல. இந்தப் பிள்ளையார் கோவில் கிணத்தடியில குளிக்கிற ஆக்களுக்கு செய்யப்பார்த்தது கிழவன். பிறகு பிள்ளையாரே பறையாமல் இருக்க நாம் ஏன் வீணு குத்திமுறிவான் என்று கிழவன் விட்டிற்று இருந்திட்டுது. ஆனு நேத்து நடந்த செயலால கிழவன் மீண்டும் செய்வினை செய்யப்போகுது.

அதுதான் நேற்று அந்த கிணத்தடியில கிழவன்ர பட்டிப்பசுக்களும் கண்டுகளுமாக மொத்த உருப்படி எட்டு காலப் பிரட்டியபடி மல்லாந்து செத்துக்கிடந்தது. கிழவன் பரியாரியெல்லோ. உடனே எல்லாம் கிழவனுக்கு விளங்கிப் போயிட்டுது. ஆரோ தேவடியாளவ தீட்டுத் துடக்கோ வந்து குளிச்சிருக்கிருளவை, அவளவ குளிக்கேக்க இந்த மாடுகள் வந்து தண்ணி குடிச்சிருக்குதுகள் அவளவையின் தொடமாட்டா அழுக்குககள் தண்ணியோட கலந்த படியால் அந்தத்தண்ணியை குடிச்ச மாடுகள் பிரண்டு போயிற்றுதுகள் என்று கிழவனுக்கு தெரிஞ்சிட்டுது. உடனே கிழவன் வீட்ட போய் அந்த குளித்த தேவடியாளுக்கு போய் அடிக்கக் கூடியதாய் தேசிக்காய் உறுட்டத் தொடங்கியது. உருட்டிய தேசிக்காய் கிழவன்ர பேத்தி படுத்திருந்த பாய்க்குள் ஓடி சிக்கிக் கொண்டது.

கிழவன் புளியமரத்தில் மாடு கட்டுற கயித்தில் தொங்கிய வண்ணம் கிடந்தான். பேத்தி பாயில நீலம் பாரிச்சு கிடந்தாள்.

ஊர் சனம் எல்லாம் இப்பொழுது இப்படிக் கதைக்கிருர்கள். "கிழவன் இப்ப செய்வினையை விட்டே எவ்வளவு காலம்? கிழவனும் பேத்தியும் செத்ததுக்கு காரணம் பேய் பிசாசுகளிட வேலையில்லை, கிழவனுக்கும் அவள் பெட்டைக்கும் தொடுப்பாம், பெட்ட முழுகாம இருந்திருக்கும் இதால பெட்ட என்னேன் நஞ்சக்கிஞ்ச குடிச்சுச் சாக கிழவன் தூங்கிச் செத்திருக்கும்."

உண்மை ஒன்று இருக்க மனித எண்ணம் பல சொல்லும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

சமூக வர்க்கங்களை பொருளாதார ரீதியாக பகுப்பது மிகவும் உசிதமானது என்பதும் வருமானம் பெறும் வழியையும் அதன் அளவையும் பொறுத்து சமூக நிலைப்பாடு வேறுபடும் என்பதும் ஜேவிபியின் வர்க்கம் தொடர்பான கருத்தியல் காண்பிக்கும் இன்னுமொரு விடயமாகும்.

ஆனல் வர்க்கங்களை பகுத்துக் காண்பது வெறுமனே பொருளாதார விடயங்களுடன் மட்டுப் படுத்துவதும் வருமானம் பெறும் வழிகள் அளவுகளுடன் சமூக இருப்பு தீர்மானிக்கப்படுகிறது எனக் கூறுவதும் வர்க்கங்கள் தொடர்பான விஞ்ஞான சோஷலிச கண்ணேட்டத்தில் இருந்து தூர விலகி இருப்பதாகும்.

வர்க்கங்கள் தொடர்பாக லெனின் முன்வைக்கும் கருத்துக்களிலிருந்து எம்மால் இதனை விளங்கிக் கொள்ள முடியும். லெனின் இவ்வாறு கூறுகிறர்.

"வர்க்கம் என்பது வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட சமூகரீதியான உற்பத்திச் செயல் முறைகளில் அவர்கள் வகிக்கும் ஸ்தானத்தாலும் உற்பத்திச் சாதனிகள் குறித்து (அனேக சந்தர்ப்பங்களில் சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ளதும் தெளிவுபடுத்தப பட்டுள்ளதும்) அதன் உறவு முறையாலும் சமூக உழைப்பு ஒழுங்கமைப்பில் அவர்கள் ஆற்றும் பணியாலும் இதற்கமைய அவர்கள் பரிகரணம் செய்யும் சமூக செல்வத்தின் அளவாலும் அதனை அடையும் விதத்தாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் விசாலமான மக்கள் குழுவாகும்." (லெனின் தொகுத்த கட்டுரைகள் 29ம் பாகம் 41 ம் பக்கம்)

சமூக வர்க்கங்களை பகுத்துக் காண்பிப்பது வெறுமனே பொருளாதார ரீதியான காரணங்களின் அடிப்படையில் அல்ல என்பதை லெனினின் இக் கூற்றிலிருந்து எம்மால் காணமுடியும். அவ்வாறே வருமானம் பெறும் விதத்தாலும் அளவாலும் சமூக இருப்பு தீர்மானிக்கப்படுவதில்லை என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. வர்க்கங்களை எவ்வாறு பகுத்துப் பார்ப்பது என்பது தொடர்பான பல அடிப்படைகளை மேற்குறிப்பிட்ட மேற்கோளில் இருந்து தெளிவாக காணலாம் அவ் அடிப்படைகளாவன.

1 வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட சமூகரீதியான உற்பத்தி செயல் முறைகளில் அவர்கள் வகிக்கும் ஸ்தானம்.

2. உற்பத்தி சாதனிகள் குறித்துஉள்ள உறவு முறை

3. சமூக உழைப்பு ஒழுங்கமைப்பில் அவர்கள் ஆற்றும் பணி

4. அதில் அவர்கள் பெறுகின்ற, அவர்களது விருப்பத்திற்கு அமைய பரிகரணம் செய்யக்கூடிய சமூக செல்வத்தின் பகுதியும் அப்பகுதியை அவர்கள் பெற்றுக் கொள்ளும் முறையும் என்பனவாகும்.

இவ்வாருக வர்க்கங்களைப் பற்றி ஆய்வு செய்து காண்பிப்பதில் ஜேவிபியினர் தவருன அடிப்படையிலேயே இருந்தனர் என்பதை எம்மால் காண்பிக்க முடியும். ஜேவிபியின் வர்க்க ஆய்வுமுறையானது யதார்த்தமும் விஞ்ஞான ரீதியானதுமான அடிப்படைகளுக்கும் மாருனது மட்டுமன்றி தம்மை பாட்டாளிவர்க்க இயக்கமாக உறுதிப்படுத்துவதற்கு ஏற்றதான முறையிலேயே இருந்தது. இதற்கமைய ஜேவிபியானது வர்க்கம் தொடர்பான மார்க்சிஸ படிப்பினைகளை தமது அவசியங்களுக்கு அமைய திரிபுபடுத்தியதோடு அத்திரிபுகளுக்கு அமைய சூத்திரப்படுத்தி குட்டி முதலாளித்துவ சக்திகளையும்கூட பாட்டாளி வர்க்கத்துள் உள்ளடக்கினர். முற்றுமுழுதாக குட்டி முதலாளித்துவ இளைஞர் இயக்கமாகிய ஜேவிபியை பாட்டாளி வர்க்க இயக்கமாக விபரித்தனர்.

வர்க்கம்தொடர்பான ஆய்வில் தவருன இடத்தில் இருந்த ஜேவிபி வர்க்கப் போராட்டம்தொடர்பாகவும் தவருன இடத்திலேயே இருந்தது. அது நெடுகவும் வர்க்கப் போராட்டம் தொடர்பாக பேசியது. ஆரம்ப காலத்தில்மட்டுமன்றி பிற்காலத்திலும் தாம் வர்க்கப் போராட்டத்தில் முன்னணியில் இருக்கும் சக்தி, அமைப்பு என்றெல்லாம் தம்மை அறிமுகப்படுத்தியது. ஆனலும் வர்க்க போராட்டம் தொடர்பாக அதற்கு தெளிவானதும் தவறற்றதுமான விளக்கம் இருக்கவில்லை என்பதை அது கூறியவற்றிலிருந்தும் செய்தவற்றிலிருந்தும் விளங்கிக் கொள்ளலாம்.

பொதுவாக எடுத்துப் பார்ப்போமாயின் வர்க்கப் போராட்டம் என்பது வர்க்க சமுதாயத்தில் உள்ள பலவேறு வர்க்கங்கள் மத்தியிலே அவ் அவ் வர்க்கங்களின் பயன் கருதி ஏற்படும் போராட்டமாகும். வரலாறு என்பது வர்க்கப் போராட்டத்தின் வரலாறு ஆகும். வரலாற்று மாற்றங்களின் போது வர்க்கப் போராட்டம் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும். தொழிலாளர் வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார அரசியல் கலாச்சார ஆதிக்கத்துக்கு எதிராக நடாத்தும் போராட்டத்தைப் பற்றியதாகும். சமூக மாற்றத்தின்போது தீர்க்கமான பங்களிப்பைச் செய்யும் இவ் வர்க்கப்போராட்டம் பல் வேறு வகைப்பட்டதாகும். வேறுபட்ட துறைகளிலும் இடம்பெறுவதாகும் எந்தவொரு சரியான புரட்சிகர இயக்கமும் வர்க்க போராட்டத்தின் சகல முறைகளையும் அதற்கு உசிதமான கவனிப்புடன் நடைமுறைப் படுத்தச் செயல்படுவது அவசியமாகும். வெறுமனே ஒன்று இரண்டு முறைகளுடன் மட்டுப் படுத்தக்முடியாது. அவ்வாருயின் அது சரியான வர்க்கப் போராட்டமாக இருக்க மாட்டாது. உதாரணமாக கூறுவதாயின் பொருளாதார போராட்டத்தை அதாவது தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராக பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தும் போராட்டம் வர்க்க போராட்டத்தில் ஒரு வகையாகும்

**வசந்த திசாநாயக, பற்றிக் பெர்ணன்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ.லோகநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனுல் வர்க்கப் போராட்டத்தை அப்போராட்டத்துடனும் அதனுடனும் தொடர்பாக தோன்றும் அரசியல் போராட்டத்துடனும் மட்டுப் படுத்துவதாயின் அது தொழிற் சங்கவாத சீர்த்திருத்த வாத போராட்டமாக மாறி அப்போராட்டம் முதலாளித்துவத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய போராட்டமாக மட்டுப்படுதலே இடம் பெறும். கருத்தியல் போராட்டமும் வர்க்கப் போராட்டத்தில் ஒரு வகையாகும். ஆனுல் ஒருபுரட்சிகர இயக்கம் கருத்தியல் போராட்டத்தோடு மட்டுப்பட்டால் அக் கருத்தியல் போராட்டம் அர்த்தம் அற்றதாக மாறும்.

ஜேவிபியினர் மத்தியில் வர்க்கப் போராட்டம் தொடர்பாக காணப்பட்டட உண்மையான கண்ணேட்டம் வர்க்கப் போராட்டத்தை ஒட்டு மொத்தமாக கொள்ளாமல் அதனை ஒன்று அல்லது இரண்டு வகையுடன் மட்டுப்படுத்தலேயாகும்.

1971க்கு முன்னர் ஜேவிபியினர் கருத்தியல் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் மட்டுமே வர்க்கப் போராட்டமாக கணித்தனர். இவ் இருவகையான போராட்டங்களுக்கும் இடையிலும் நிலவிய சகல போராட்ட வகைகளையும் வன்மையாக நிராகரித்த ஜேவிபி அவற்றின் அவசியத்தைக் கண்டிருந்தால் கூட அது கிளர்ச்சியை வெற்றி பெறச் செய்வதற்காக அச்சந்தர்பத்தை பாவிக்கும் உபாயமாக மட்டுமேயாகும்.

வர்க்க போராட்ட பூமியில் அத்தியாவசிய போராட்ட வகைகளான வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு இயக்கம், ஊர்வலம், விவசாயிகள் போராட்டம், மாணவர் போராட்டம் ஆகிய அனைத்தும் ஜேவிபியினுல் 1971க்கு முன்னர் நிராகரிக்கப்பட்டதோடு அப் போராட்டங்கள் பயனற்ற, எதிர்ப் புரட்சிக்கு சேவையாற்றுகின்ற, அடக்கு முறையை அழைக்கின்ற புரட்சிகர இயக்கத்துக்கு அழிவைத் தேடுகின்ற என்பவையாகவே விபரிக்கப்பட்டன. வேலை நிறுத்தம் தொடர்பாக ஜேவிபி அன்று கூறியது இவ்வாறுதான்.

'நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வேதனம் பெற்று வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கான பாதை வேலை நிறுத்தம் மட்டுமல்ல. அது (வேலை நிறுத்தம்) தொழிலாளர் வர்க்க போராட்டத்தை வேலைநிறுத்தம் என்னும் கோட்டுக்குள் சிக்கவைத்து முதலாளித்துவ சமுதாய முறையை பாதுகாக்கும் முதலாளித்துவ உபாயமாகும். ஏகாதிபத்திய வாதிகளுக்கு, முதலாளித்துவ வாதிகளுக்கு மற்றும் சகல வகையான சுரண்டல்காரர்களுக்கும் எதிராக வர்க்க உணர்வுடன் எரிந்து கொண்டிருக்கும் தீ யான பாட்டாளி வர்க்க மக்களின் சிந்தனையை விலக்கி புரட்சிகர இயக்கம் தொழிலாளர் மக்கள் மத்தியில் இருந்து தோன்றி, வளர்ந்து போஷிக்கப்படுவதை தடுக்கும் நோக்கத்தை கொண்ட சம்பள உயர்வு கோருதல் வேறு நிவாரணங்களைக் கோருதல் போன்ற பயன் அளிக்க முடியாத கோரிக்கைகளை வைத்து மட்டும் நடை பெறும் வேலை நிறுத்தம் உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வையும் போராட்ட தன்மையையும் திசை திருப்புகிறது. கடந்த காலகட்டத்தின் இலங்கை தொழிற்சங்க இயக்க வரலாற்றில் காணப்படும் பிரதான இலட்சணமும் இதுவேயாகும். இலங்கை தொழிற் சங்க இயக்கத்தின் வரலாறு சம்பள உயர்வு கோரி நடை பெற்ற போராட்டங்களின் கதையேயாகும்.

இது உழைக்கும் மக்களின் வியர்வை, கண்ணீர் இரத்தம் ஆகியவற்றைக் கொண்டு எழுதப்பட்ட சோகக் கதையாகும் வேலை நிறுத்தம் செய்து மக்கள் கூடுதலாகப் பெற்ற சிறிய அளவு பணத்தை முதலாளித்துவ ஆட்சியாளர் பண்டங்களின் விலையை உயர்த்தி திரும்பவும் பறித்துக் கொண்டனர். கழுவி கழுவி சேற்றில் போடுவது போன்று மீண்டும் மீண்டும் வேலை நிறுத்தங்கள் ஆரம்பமாகின. நடை பெற்றன. முடிவுற்றன, ஆனுல் உழைக்கும் மக்களுக்கு ஏதாவது பயன் கிட்டியதா? (ஜேவிபியின் மத்திய செய்திப் பத்திரிகையான "ஜனதா விமுக்தி" 3வது பத்திரிகை 1970 செப்டம்பர் 05 ம் திகதி)

## அசை..

நாடகங்களை மேடையேற்றினுர்கள். எனக்குப் போகக் கிடைக்கவில்லை. அதனுல் இது ஒரு விமர்சனமாகி விட முடியாது.

பார்த்தவர்கள் கேட்டவர்கள் சொன்னுர்கள். மிகவும் ஏமாற்றமாக இருந்தது. என்னை நானே உதைத்துக் கொண்டேன்.

மறுநாள் நாடக விழா பற்றிய விமர்சனக் கருத்தரங்கு ரேடியோ ஏசியா மண்டபத்தில் நடைபெற்றது. தவறவிடவில்லை. கழகத்தின் குறுநாடகம் ஒன்றும் அரங்கேறியது. மகாபாரதத்தில் ஒரு துளியை எடுத்து கடலாக்கி காட்டினுர்கள்.

அலையாகி அள்ளிக் கொண்டு போய் விட்டது.

வாழ்க்கையில் எல்லாத் துளிகளுக்கும் இந்த பிரவாக சக்தி இருந்தாக வேண்டும் என்பது பிரம்ம நிட்சயம் போலிருக்கிறது. சூரியனையே தன்னகத்தே அடக்கிக் கொள்ளும் வல்லமை துளிக்கு இருக்கிறதே! துளி நாடகமும் சொல்லிக் காட்டியது.

நாடக விழாவின் ஐந்து நாடகங்களுமே இப்படியான துளிகள் என்ருர்கள். மக்கள் நிறைந்த மண்டபமாம். 'வசூலில் சாதனை' என்று மார் தட்டிக் கொள்ளாது வழமை போல 'வீங்காத மண்டை' நினைவுகளுடன் மீண்டு போகும் கழகக் காரருக்கு வாழ்த்துக்கள்.

## நனவிடை தோய்தல்

நீண்ட காலத்திற்கு பிறகு நல்லதொரு நூலைப் படித்த மகிழ்ச்சி. எஸ்.பொ வின் 'நனவிடை தோய்தலை' பற்றி சொல்கிறேன். அவர் காலத்து யாழ்ப்பாணத்தை படமாய் எடுத்து நூலாய் திரித்து விட்டிருக்கிருர்.

இது ஒரு காலத்தின் பதிவு.

கதை மாந்தர்கள்– நிஜ மாந்தர்கள். மேடை– யாழ்ப்பாணம். ஒப்பனை– பேச்சுத்தமிழ். உதவி – மட்டக்களப்புத் தமிழ்.

நான் அழவில்லை என்று பொய்க்கு சிரிக்க முயன்றிருக்கிருர் எஸ்.பொ. பாம்பின் காலைப் பாம்பறிய மாட்டாதா? மண்ணைப் பிரிந்தவர்களையும் பெண்ணைப் பிரிந்தவர்களையும் இலகுவாகக் கண்டுபிடிக்கலாம். உள்ளே அழுது கொண்டு வெளியே சிரிப்பார்கள்.

இதை எஸ்.பொ அழகாகச் 'செய்திரிக்கிருர்'.

நீந்த தெரியாதவர்களையும் பண்டாரக்குளத்தில் அமிழ்த்தி எடுத்திருக்கிருர். மீண்டும் இப்படியொரு யாழ்ப்பாணம் கிடைக்கமாட்டாதா என ஏக்கமாயிருக்கிறது.

வாசிக்க வேண்டியது மட்டுமல்ல, பாதுகாத்து வைக்க வேண்டியதுமான ஒரு நூல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550 -CALL MIKE or RAJAN**





**Car Certification 29.99**

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
திருத்துவதில்பலவருடம்
அனுபவம்உள்ளவர்கள்

**We use Quaker State Oil**






ஓம் ஸ்ரீசாயிராம்

# HEALTH FOODS HERBAL CLINIC

## ஆரோக்கிய உணவு மூலிகை மருத்துவ நிலையம்

எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட
கீழ்க்கண்ட எண்ணெய் வகைகள் கிடைக்கும்;

- கூந்தல் வளர்ச்சித் தைலம்
- பொடுகுத் தைலம்
- பீனிசத் தைலம்
- கிரந்தி எண்ணெய்
- சருமத் தைலம்
- வாத நோவெண்ணெய்
- கடுக்காய்க் குளிகை
- முக்கூட்டுக் குளிகை
- கஸ்தூரி கோரோசனை மாத்திரை
- பேறுகால சரக்குத்தூள்

நாட்பட்ட சகல நோய்களுக்கும், இயற்கை முறை மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்.

**மகப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு விசேடமான மூலிகை முறைகள் உண்டு.**

**Director & Counsellor**
**Prof.Dr.(ms) A.Ganesaal**
12 St.Dennis Drive # 627
Don Mills. Ontario M3C 1G2
Tel: (416) 467 6393
FaX (416) 467–7270

## கம்பியூட்டர் ஜாதகம்

கம்பியூட்டர் முறையில் தமிழில் ஜாதகம்
பத்தே நிமிடங்களுக்குள்,
கணித முறையிலோ வாக்கிய முறையிலோ
கணித்துக் கொடுக்கப்படும்

- ★ எண்கணிதம்
- ★ திருமணப் பொருத்தம்
- ★ ஜோதிடம்
- ★ பெயரிடுதல்
- ★ கைரேகை
- ★ பெயர்மாற்றம்
- ★ கிரகதோஷ பரிகாரம்

முதலிய பிரச்சனைகளுக்கு பெண்டுல சுழற்சியின் மூலம் துல்லியமான அச்சொட்டான பலாபலன்கள் ஆராய்ந்து கூறப்படும்.

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS




இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது.
தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

**முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி**

**ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது**

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS





VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றனவும் கிடைக்கும்.




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 ST.DENNIS DR

(DON MILLS/EGLINTON)

### அனைத்தும் மலிவு விலையில்

★ இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,

★ பால் பழங்கள், உடன் மரக்கறி வகைகள்,

★ இறைச்சி, மீன், கடலுணவு வகைகள்,

★ கனடிய உணவுப் பொருட்கள்

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்

★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

## (416) 421 3429




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலமே! கவி விதை!

அருணன்

எதற்கும், என்ன வரைவிலக்கணம் எனக் கேட்டு 'மடக்கி' விடலாம் என்பது, புத்திசீவிகளால் தாம் அறியப்படவேண்டும் எனக் கருதிக் கொள்வோர் காவித்திரியும் ஆயுதம்.

இவ் ஆயுதம் 'கவிதை' மேலும் பாய்ச்சப்படுகிறது. இதில் இன்னொரு இரகசியம் என்னவென்றால் கவிதைக்கான வரைவிலக்கணத்தை அவர்களால் கூட கூற முடியாது.

கவிதை என்பதற்கு மட்டுமல்ல, பல விடயங்களுக்கு வரைவிலக்கணம் கூறமுடியாது. பொதுவாக உணர்ச்சியுடனும், உணர்தலுடனும் சம்பந்தப்பட்டவற்றை வரையறை செய்யமுடிவதில்லை.

உணர்ந்து கொண்டதன் பிரதிபலிப்பை பிறருக்கு உணர்த்த கைக்கொள்ளும் ஒரு வடிவமே கவிதை.

உணர்ந்து கொள்ளலும் உணர்த்துதலும் ஆளுக்கு ஆள் வேறுபட்டு இருக்கும் போது, கவிதை என்பது, இன்ன இன்னதை இப்படி இப்படி அமைத்தால் என, எப்படிச் சொல்ல முடியும்?

கவிதை என்பது ஒரு எழுத்து வடிவமே, இதனால் இங்கு சொற்கள் அவசியமாகின்றன. சொற்கள் எனும் போது அதற்குள்ள ஒலித்தன்மை உருவத் தன்மை என்பவற்றை மீறி அதன் பொருளே முதன்மையாய் கொள்ளப்படவேண்டும்.

ஏனெனில் கருத்தின் அல்லது பொருளின் குறியீடே வார்த்தை அல்லது சொல். இதை இன்றைய கவிதை வடிவம் முதன்மைப் படுத்துகின்றது.

வார்த்தைகளை அடுக்கி விட்டால் மட்டும் கவிதை வந்து விடப் போவதில்லை. (வாக்கியம் பூரணத்துவப்படவே, வார்த்தையின் ஒலித்தன்மையை விட அதன் பொருளே முக்கியத்துவம் பெறும் போது)

அதே நேரம் கருத்தை மனதில் கொண்டு, வார்த்தைகளை அடுக்கினால் மட்டும், கவிதை வந்து விடவா போகிறது? நல்ல வாக்கியம் வரலாம்.

சொல்லுக்கு அர்த்தமும் இசையும் உண்டு. ஆனால் அர்த்தத்தை முடக்கி வைத்துக் கொண்டு, இந்த ஒழுங்கில் சொல் தரும் இசை வரவேண்டுமெனச் சட்டம் போட்டுக் கொள்வது, மொழியின் தாற்பரியத்தை மீறுவதுடன், மொழியையே அர்த்தமற்றதாக்குவதாய் முடியும்.

இரண்டையும் அதாவது, சொல்லின், அர்த்தத்தையும் இசையையும் (ஒலிநயம்) சமனாய்ச் சீர்தூக்கிக்கொண்டு செயற்பட்டால் கவிதை ஆக்குவதாய்த்தான் முடியுமே அல்லாமல் கவிதை வழங்க முடியாது.

அல்லது இசையின் தடத்தின் வழியே அனாவசியச் சொற்களை காவிக்கொண்டு கவிதையின் இறுக்கத்தை நெகிழ்த்த வேண்டி வந்துவிடும்.

இவ்இரண்டையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ தான் யாப்பு முறையில் காணலாம்.

பேச்சு மொழியில், சப்த லயம் ஏதோ ஒரு விதிப்படியும் கூட இருப்பதில்லை. இருந்தும் மொழியின் தாற்பரியத்திற்கேற்ப கருத்துப் பரிமாறப்படுகின்றன தான். உணர்வுகள் புரிந்து கொள்ளப் படுகின்றன தான். இங்கு அர்த்தம் முக்கியமானதல்லாமல் ஓசை நயம் அல்ல.

இந்த அடிப்படை உண்மைதான் இன்றைய கவிதையின் அடிப்படை. கவிதையின் இரண்டு அவத்தைகள் உண்டு. ஒன்று, பிறப்பது, இன்னொன்று போய்ச் சேர்வது– இவ் இரண்டும் ஒவ்வொரு தளங்களில் காலூன்றி கவிதையாய் வியாபித்து இருக்கிறது. அதாவது, இவ் இரண்டினதும் பூரணத்துவமே, ஒரு சிறந்த கவிதையைத் தரும்.

கவிதையானது பிறக்கமுன் கருவாகி, உரு ஆக வேண்டும்.– காட்சியும் அதில் கண்டறியப்பட்ட உணர்வும் ஆழமான கருத்தும் இணைந்து கருவாகி, கவிதையாய் உரு ஆகும். இது ஒரு கவிஞனின் உள்ளத்திலே நடந்தேறும்.

கவிதையாய் உருக்கொண்டது அறிந்திரா உணர்வுபூர்வ ஆழமான கருத்தாய் காட்சியுடன் வேரூன்றும்.– இது பிறிதொரு உள்ளமான வாசக உள்ளத்திலே நடந்தேறும்.

ஆக, கவிஞன் இங்கு என்ன செய்கிறான்? தான் கண்ட, தன்னைத் தாக்கிய ஆழ் அனுபவத்தை கவிதை வாயிலாக இன்னொருவருக்கு அறிவிக்கிறான். தன் சிந்தனை பெற்ற களிப்பை அல்லது பேறை, இன்னொருவருக்கு அறிவிக்க விரும்பும் தாகம் கவிஞனுடையது.

சரி, அறிவிக்க வேண்டின் வழிகளா இல்லை, இங்கு கவிதையின் அவசியம் என்ன?

இங்கு தான் கவிதையின் பரிமாணத்தை அறிந்து கொள்ள நேர்கிறது.

கவிதை ஒரு கவிஞனுக்கு எங்கிருந்து எப்படிக் கிடைக்கிறது என அறிவோம்.

தன் மனதின் இடுக்குகளில் இருந்து நேரிடும் சில விடயங்களை யாருக்காவது சொல்ல வேண்டுமென்ற வேட்கை சிலருக்கு இருக்கிறது.– இவ் அவஸ்த்தை நிச்சயமாக ஒரு கவிஞனுக்கு இருக்கிறது.

அனுபவம் எல்லாமே எல்லோருக்கும் அவர் மனதில் பதிவதில்லை அல்லது தொடுவதில்லை. இங்கு அனுபவம் எனும் போது, இன்னொருவருக்கு நேரும் அனுபவத்தை கேட்பதும், பார்ப்பதும் கூட ஒரு அனுபவமே. அதை விட தனக்கு நேர்வதும், தான் அறிவதும், கூட அனுபவமே.

ஆயினும் தொடும் அல்லது பதியும் ஏதோ ஒன்று ஒரு கவிஞன் மனதில் ஒரு விதையாய் விழுகிறது. இவ் விதை சட்டுப் புட்டென்று உடனேயே கவிதையாய் பிறப்பெடுப்பதில்லை. கவிஞன் மனதில் மெதுவாய் படிப்படியாக வளர்ந்து உருப் பெறுகிறது. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரு சிறப்பான கவிதையின் வெளிப்பாட்டுக்கான அவகாசம்.

இந்த அவகாசத்தின் கால அளவு வேறுபடலாம். மனதை அடையும் தாக்கத்தின் பெறுதி, கவி மனதின் வளம், வேகம் ஆகிய தன்மை இதைத் தீர்மானிக்கும். இனிமேலும் பொறுக்க முடியாது இதைச் சொல்லியே ஆக வேண்டும் எனும் நிலை வருகையில் வெளியாகும் கவிதையே அதன் பூரணமான பிறப்பு.

அதன் கவிஞர் சில காலம் கடந்து அக் கவிதையை வாசிக்க நேர்கையில் இப்படி எழுதியிருக்கிறேனு என இன்ப அதிர்ச்சி பெறின் அக்கவிதையின் பூரணத்துவம் உறுதி செய்யப்படும். இல்லை, திருத்தி எழுத இடமிருக்கிறது என நினைத்தால் அக் கவிதை ஒரு குறைப் பிரசவம் என முடிவாகும்.

இப்படிக் கிடைத்த கவிதை பெறுமானத்தைக் கொண்டிருக்கும் - அக் கவிதையில் காட்சி, உணர்வு, சிந்தனை, கருத்து என்பன கலந்தே இருக்கும்.

ஒரு காட்சியை வசனத்தில் வரைய முடிவதில்லை. முடிந்தாலும் உள்ளபடி அப்படியே உணர்வுடன் உணர்த்த முடிவதில்லை. - அசையும் படமாய்த் தர வசதி வரினும், அதே சிந்தனையை அப்படியே சுருக்கமாய் வசனத்தில் இறக்கி வைக்க முடிவதில்லை.- ஆனுல் கவிதையால் முடிகிறது. (கவிதையால் மட்டுமே முடியும் என்பதால் வசனத்தால் முடியாமல் கவிதையால் முடியும் என்பதே வாதம்.)- நாடகத்தால் முடியும், ஆனுல் அது பிறிதொரு வடிவம் ஆனுல் அது கவிதையிலும் இலகுவானதல்ல.

ஆக உணர்வுபூர்வ அனுபவத்தை உணர்வு பூர்வமாய் அறிவிக்கும் கவிதையின் அவசியம் இனியும் விளக்க வேண்டியதல்ல என நினைக்கிறேன்.

வெளிவிடப்படும் கவிதைகள் எல்லாம் உயர் தரமானவையே இருக்கின்றன என்பதுமில்லை, கவிதைகள் எல்லாம் சரியான அங்கீகாரத்தை பெறுகின்றன என்றும் இல்லை.

கவிதை என்பது கவிஞனின் சுயத்தின் இனிய கசிவு என்கின்றனர். -கவிதையின் கருப்பொருளோ உள்ளத்தில் விழுந்து ஊற்ருய் கவிதையாய் பரிணமிக்கிறது.

விழுந்த கவி, விதை விளைந்து மனத்தில் தான் ஆக ஒரு கவிதையின் விளை நிலம் அம் மனது தான். அங்கு போசாக்கு(வளம்) மட்டுமல்ல, தக்கதைக் கொண்டு தகாததை தள்ளும் வடிகட்டலும், பராமரிப்பும், புளுகமும், பூரிப்பும் சேர்ந்தே இருப்பதால் இது ஒரு வித்தியாசமான விளை நிலம்.

ஆனுல், இது ஆளுக்கு ஆள்வேறுபடும். அவரவர் பக்குவத்தைப் பொறுத்தது அது. - அறிவு, அனுபவம், ஆற்றல் மட்டுமல்லாமல், சிந்தனை, தேடல், முடிவு செய்யும் தகமை என்பன இப் பக்குவத்தைத் தீர்மானிக்கும்.

ஒரு கவிதையின் கருப்பொருளின் தெரிவு சுயமானது. - அதைத் தெரிவு செய்த போது, கவிஞன் அதில் கண்டு கொண்ட நுண்மை அதை வெளியிடுவதில் மிளிர வேண்டும், அப்போது தான் கவிஞன் சித்தியெய்துகிருன்.

அன்ருடம் நாம் அனுபவிக்கும் மிகச் சாதரண செயலினைக்கூட புதிய கோணத்தில் கவிஞன் சுட்டிக் காட்டிய வேளை எமக்கு வியப்பாய் போய்விடுவதுமுண்டு. அட, இவ்வளவு நாளும் எங்களுக்கு தெரிந்ததில் இப்படி ஒரு புதுப் பார்வையா என நம் உணர்வுகள் பிரமித்துப் போவதுண்டு. இத்தகைய வேளையில் கவிஞன், அவனது திறமை வாசகரிடையே அங்கீகாரம் பெறுவதில் ஆச்சரியமில்லை.

ஒரு கவிதையின் பிறப்பு என்பது கவிஞனின் அனுபவத்தின் அதன் தரிசனத்தின் மறு அவதாரம். இவ் அவதாரம் சில சமயங்களில் துரதிஷ்டமாக, இனங்கண்டு கொள்ளப்படுவதுமில்லை. - உண்மையில் இது கவிஞனின் தோல்வியாய் இருப்பதில்லை, ஏனெனில் வாசகனுக்கும் அதே அனுபவம் வாய்த்திருந்தால் அல்லது அதை ஒத்த அனுபவம் வாய்த்திருந்தால் கவிஞனின் அது சார்ந்த கவிதை வெளிப்பாடு மிக இலகுவாக இனங்காணப்படும்.- அது அந்நியமாய் இருப்பின் கவித்திறம் அங்கீகாரம் பெற்ருல் கூட கவிப்பொருள் அங்கீகரிக்கப்படாமல் போய் விடுவதுமுண்டு.

அதற்காக வாசகனின் அனுபவம், தரம் அறிந்து கவிதை வெளிவிடுவது கவிதை ஆக்குவதாய் அமையுமே அல்லாமல் கவிதை வெளிவிடுவதாய் அமையாது.

கவிஞன் தன் உள்ளக்கிடக்கையை வெளியே வார்த்துவிட்டு அவன் அமைதியடைந்து விடுவான்.

ஆதலால் ஒரு கவிதையின் அங்கீகாரம் வாசகனையும் பொறுத்தது.- இங்கே வாசகனும் ஒரு கவிதையின் வாழ்வில் பங்கேற்கிருன்.

இன்றைய கவிதை இக்கால நிகழ்வையே பிரதிபலிக்கின்றது.- அது இன்றைய கவிதைகளின் பலமும் கூட இவை எங்களுடையவை (எங்கள் வாழ்வு) என்று உடனே அங்கீகாரம் கிடைத்து விடுகிறது.- அது கவிதையின் நோக்கமும்,தேவையும் கூட "இலக்கியம் மானிடரிடமும் அவர் தம் வாழ்க்கையிலும் காணவும், படைக்கவும் கிடைக்கிறது" எனும் கூற்றை இக்காலக்கவிதை முயற்சி நிறைவு செய்கிறது எனலாம்.

அன்றைய மானிட உலகில் கவிதைகள் (செய்யுள்) இயந்திர மனிதருக்கானது போல் அமைக்கப்பட்டன. ஆனுல் இன்றைய உலகு இயந்திர மயமான போதும் இன்றைய கவிதைகள் மானிடருக்கானவையே போல் அமைகின்றன.

முடிவுகளையும் தீர்வுகளையும், உபதேசங்களையும் சொல்லிவந்த கவிதை முறை மாறி, உணர்வுகளையும், காட்சிகளையும் அனுபவ வாயிலில் தொட்டுக் காட்டுவதுடன் வாசக மனதை கிளறுவதன் மூலம் தீர்வையும் முடிவையும் உணர்வையும் சிந்தனையையும் பெறுவது வாசகன் கடமை என வாசக மனதையும் கவிதையின் பங்குதாரராக்குகிறது இன்றைய கவிதை.

இதனுல் இயந்திர மனிதன் போல் மௌனித்து இருந்து கேட்டதை செய்து கொண்டு சொன்னபடி நடந்து கொண்டும் சிந்தனைக்கு வேலையில்லாதிருந்த நிலை, இன்று தானே சிந்தித்து தீர்வைப் பெறும் உயர் மனித நிலைக்கு இக்காலக் கவிதை வளர்ந்துள்ளது.

வளரும்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சினி துணுக்கு

# ரொறன்ரோ படவிழாவில் நாயகன், தேவர் மகன்

பட்டாபி

தன்னைப் பற்றிய சண்டிராணி படத்தை திரையிடக் கூடாது என்று தான் வழக்குத் தொடரப் போவதாக பூலான் தேவி தெரிவித்திருக்கிறார். சர்வதேச ரீதியாக இந்தப் படம் திரையிடப்படுவதை தடுக்க தான் இங்கிலாந்து, அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப் போவதாகவும் தன்னைப் பற்றி தவருக அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். பிரிட்டனின் நான்காவது தொலைக்காட்சியினுல் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் இம்முறை ரொறன்ரோ திரைப்படவிழாவிலும் திரையிடப்படுகிறது.

கான்ஸ், எடின்பேர்க் படவிழாக்களில் இந்தப் படம் திரையிடப்பட்ட போது விமர்சகர்களால் பாராட்டப்பட்டிருந்தது. தனக்கு இன்னமும் வேண்டுமெனறே படம் காட்டப்படவில்லை என்று பூலான் குற்றம் சாட்டுகிறார். இயக்குனர் பேடிக்கு அனுப்பிய வக்கீல் நோட்டீஸில் 'நான் கேள்விப்படுவதிலிருந்து என்னை ஒரு செக்ஸ் பொருளாகவே காட்டப்பட்டி ருக்கிறது. எனக்கு அவமானம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உண்மையை திரித்ததனுல் என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது' என்று தெரிவித்திருக்கிறார்.

இந்திய தணிக்கைச் சபை இந்தப் படத்தில் சில காடசிகள் நீக்கப்பட வேண்டும் என்று கடந்த வாரம் வலியுறுத்தியிருக்கிறது. கற்பழிப்புக் காட்சி, நிர்வாணமாய் நடந்து செல்லும் காட்சி, பூலான் தேவி படம் பூராவும் பேசுகின்ற தூஷண வார்த்தைகள் போன்றவற்றை வெட்டும்படி தணிக்கைச் சபை கோரியிருக்கிறது. இந்த காட்சிகளை வெட்டுவதை விட தான் படத்தை இந்தியாவில் திரையிடாமல் இருப்பது நல்லது என்கிறார் இயக்குனர். இந்தக் காட்சிகளை வெட்டினுல் பூலான் அதன் பின்னர் செய்யும் வன்முறைக் காட்சிகளுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும்' என்கிறார் அவர்.

பூலான் எழுத்தாளர் மாலா சென்னுக்கு கூறிய விடயங்களிலிருந்தே படத்தை தயாரித்ததாக இயக்குனர் கூறிய போதும் 'மாலா தன்னைச் சந்திக்கவில்லை என்றும் தன்னுடன் சிறையில் இருந்த மற்றப் பெண்கள் எழுதியவற்றையே சிறை அதிகாரிகள் மூலமாக மாலாவிடம் கொடுத்ததாகவும்' கூறும் பூலான் 'ஏன் வேண்டுமென்றே என்னை பொய்களால் அழிக்க முயல்கிறார்கள் என்று புரியவில்லை என்றிருக்கிறார்.

★ ★ ★

இம்முறை ரொறன்ரோ திரைப்பட விழாவில் 22 இந்தியப் படங்கள் 'இன்றைய இந்தியா' என்ற தலைப்பில் திரையிடப்படும். இவற்றில் நகைச்சுவைப் படங்கள், இசைப் படங்கள், மர்மப் படங்கள், மற்றும் மத வன்முறை பற்றிய ஒரு விவரணப்படம், வெளிநாடுகள் இந்தியாவை எப்படி மதிக்கின்றன என்பது பற்றிய இன்னெரு விவரணப் படமும் திரையிடப்படுகின்றன.

இதில் பூலான்தேவி பற்றிய படம் இம்முறை திரையிடப்படுகிறது. ஷோ பிஸினஸ் என்ற நாவலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பொலிவூட் என்ற படம் திரையிடப்படுகிறது. இது புகழ் பெற்ற நடிகனுரும் ஒருவர் அரசியலுக்கு செல்வது காண்பிக்கப்படுகிறது.

சில்பி என்ற படம் கலையுணர்வுடன் நெசவு நெய்கின்ற ஒருவர் பற்றியது. இலைகளும் முட்களும் என்ற படம் நண்பிகளான ஐந்து பெண்கள் சமூகத்திற்காக வளைந்து கொடுக்காமல் நடந்து இறுதியில் ஒருவர் பேச்சுக் கலியாணம் ஒன்றுக்கு சம்மதித்து படும் பாடு பற்றியது.

மணி ரத்தினத்தின் மௌனராகம், நாயகன், ரோஜா, திருடா திருடா என்பனவும் திரையிடப்படுகின்றன.

பரதனின் தேவர் மகனும் காண்பிக்கப்படுகிறது.

*வெள்ளிக்கிழமை செப் 9ம் திகதி*

கோவிந்தன் அரவிந்தனின் முகமூடி கம்பர்லாண்ட் தியேட்டர் 2 இல் 1 மணிக்கு திரையிடப்படுகிறது. ஞாநடவநச டிக வாந றபைேள என்ற புத்த தேவ் தாஸ் குப்தாவின் படம் அன்று ஏழு மணிக்கு எல்கின் தியேட்டரில் திரையிடப்படுகிறது. இந்திய விவசாயியின் துயரம் என்ற முரளி நாயரின் படம் புளோர் சினிமாவில் ஏழு மணிக்கு திரையிடப்படுகிறது. பூலான் தேவியின் படம் வார்சிட்டி 2 இல் மாலை ஏழு மணிக்கு திரையிடப்படும். பாஸிகார் என்ற அப்பாஸ் முஸ்தானின் படம் புளோர் தியேட்டரில் 9 மணிக்கு திரையிடப்படும். அடூர் கோபாலகிருஷ்ணனின் The Servile என்ற படம் கம்பர்லாண்ட் 1 இல் 9.45க்கு திரையிடப்படும்.

*சனிக்கிழமை செப் 10ம் திகதி*

ரோஜா அப்ரவுண் 3 தியேட்டரில் 12 மணிக்கு திரையிடப்படும். எக்தி ஜிபான் என்ற ராஜா மித்ராவின் படம் கம்பர்லாண்ட் 4ம் தியேட்டரில் 2.30க்கு திரையிடப்படும். கம்லாபாய் என்ற ரீனு மோகனின் படம் 4.15க்கு அப்ரவுண் 2 ல் திரையிடப்படும். சுதிர் மிஸ்ராவின் தராவி என்ற படம் கம்பர்லாண்ட் 1 இல் 4. 30க்கு திரையிடப்படும்.

பட்டம் என்ற கௌதம் கோஸின் படம் புளோர் தியேட்டரில் 7 மணிக்கு திரையிடப்படும். தந்தை, மகன், புனித யுத்தம் என்ற ஆனந்த் பத்வர்தனின் படம் கம்பர்லாண்ட் 3 ல் ஏழு மணிக்கு திரையிடப்படும். வெள்ளித்திரையின் குழந்தைகள் என்ற திலிப் கோஸின் படம் 9. 30க்கு பாக்ஸ்ரேஜில் திரையிடப்படும். The clap trap என்ற ஜில் மிஸ்கிற்ருவின் படம் புளோர் தியேட்டரில் அதே நேரம் திரையிடப்படும்.

26ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திரைப்பட விழா...

*ஞாயிற்றுக்கிழமை செப் 11ம் திகதி*

நாயகன் மணி ரத்தினம் அப்ரவுண் 3 12.30
பூலான் தேவி பேடி கம்பர்லாண்ட் 2 1 மணி
சில்பி நபியேந்து சட்டர்ஜி புளோர் 9.30
The Sevile அடுர் கோபாலகிருஷ்ணன் புளோர் தியேட்டர் மாலை 6.30
ரோஜா மணிரத்தினம் புளோர் 9 மணி
இலைகளும் முட்களும் கே.பி.சசி கம்பர்லாண்ட் 3 9.30 மணி

*திங்கள், செப் 12*

கமலாபாய் ரீனு மோகன் வார்சிட்டி 12 மணிக்கு
பட்டம் கௌதம் கோஸ் அப்ரவுண் 2 1 மணிக்கு
தந்தை, மகன், புனித யுத்தம் ஆனந் பர்வத்தனன் கம்பர்லாண்ட் 3 4 மணிக்கு
நாயகன் மணி ரத்தினம்புளோர் 6.30 மணிக்கு
படகு வாசுதேவன் நாயர் புளோர் 9.30
திருடா திருடா மணிரத்தினம்அப்ரவுண் 1 9.45

*செவ்வாய், செப் 13*

சில்பி நபியேந்து சட்டர்ஜி கம்பலர்லாண்ட் 2 6.30
தேவர் மகன் பரதன் அப்ரவுண் 2 9.15

*புதன், செப் 14*

வெள்ளித்திரையின் குழந்தைகள் திலிப் கோஷ் வார்சிட்டி 1 காலை 11.30
The clap trap ஜில் மிஸ்கிற்ரு வார்சிட்டி 1 காலை 11.30
படகு வாசுதேவன் நாயர் கம்பர்லாண்ட் 1 1.45
திருடா திருடா மணிரத்தினம் புளோர் 6 மணி
இலைகளும் முட்களும் கே.பி.சசி புளோர் 9 மணி
மௌனராகம் மணிரத்தினம் கம்பர்லாண்ட் 2 9 மணி

*வியாழன் செப் 15*

பாஸிகார் அப்பாஸ் முஸ்தான் கம்பர்லாண்ட் 3 காலை 11
Shelter of the wings புத்தகேப் தாஸ்குப்தா கம்பர்லாண்ட் 4 3.15
இந்திய விவசாயியின் துயரம் முரளி நாயர் கம்பர்லாண்ட் 4 3.15
தராவி சுதிர் மிஷ்ரா புளோர் 5.30
Masquerade அரவிந்தன் கம்பர்லாண்ட் 4 6 மணிக்கு
தேவர் மகன் பரதன் புளோர் 8 மணிக்கு

*வெள்ளி செப் 16*

பொலிவூட் விக்ரம்ஜித் சிங் அப்ரவுண் 3 6 மணிக்கு
மௌனராகம் மணிரத்தினம்புளோர் 6.30
ஆங்கிலம், ஆகஸ்ட் தேவ் பெனகல் அப்ரவுண் 2 9.15

*சனி செப் 17*

கொல்கோட்டா கிரகத்திலிருந்து கதைகள் ரசிர் ஜோசி வார்சிட்டி 1 9.30
மிஜோரம் பங்கஜ் புத்தாலியா வார்சிட்டி 1 9.30
பொலிவூட் விக்ரம்ஜித் வார்சிட்டி 2 11.30
ஏக்தி ஜிபான் ராஜா மித்ரா கம்பர்லாண்ட் 4 8.15

*எனினும் திரைப்பட அரங்குகள், நேரம் குறித்து 968 3456 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு முன்கூட்டியே உறுதி செய்து கொள்ளவும்*

# பாஸ்கரலிங்கம் வரமாட்டார்

வெளிநாடு சென்ற பாஸ்கரலிங்கம் நாடு திரும்ப மாட்டார் என்று தெரிய வருகிறது. தனக்கு சுகவீனம் என்று கூறிக் கொண்டு வெளிநாடு சென்ற அவர் இதுவரையும் அரசுடன் தொடர்பு கொண்டு தனது நிலை பற்றிக் கூறவில்லை. தற்போது அவரது பதவிக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஏ. எஸ்.ஜெயவர்த்தனவை நியமிப்பதற்கு முதலில் ஜனாதிபதி தயக்கம் காட்டிய போதிலும் பின்பு சம்மதம் தெரிவித்திருந்தார்.

பாஸ்கரலிங்கத்தின் மீது கடும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தற்போது கிளம்பியுள்ளன.

# வடக்குக்கு கனடிய உதவி

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்க கனடாவில் உள்ள பொது நிறுவனம் வழங்க முன் வந்திருக்கிறது. இலங்கையில் சமாதானத்திற்கான கனடிய நிவாரண நிறுவனம் என்ற அமைப்பு யாழ்.அரச அதிபர் மாணிக்கவாசகருக்கு எழுதிய கடிதத்தில் 'கனடிய அரசு தமது நிறுவனத்திற்கு தகுந்த உதவிகள் செய்வதாக' குறிப்பிட்டிருக்கிறார். கோதுமைமா, சீனி, உடைகள், குழந்தைகளுக்கான சத்துணவுகள், அங்கவீனர்களுக்கான சக்கர வண்டில்கள், கைத்தடிகள், எக்ஸ்ரே உபகரணங்கள், சிறிய ஜெனரேட்டர்கள், கூடாரத்துணிகள் போன்றவற்றையும் நிதி நெருக்கடியானவர்களுக்கு வழங்க பணமும் அனுப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக இந்த அமைப்பின் செயலாளர் கிறிஸ் சந்திரசாகர அறிவித்துள்ளார்.

# ஜே.ஆர் சுயசரிதை எழுதுகிறார்

ஜே.ஆர் தற்போது தனது அரசியல் கால வாழ்வு பற்றிய நூல் ஒன்றை இந்திய பதிப்பகம் ஒன்றுக்காக எழுதிக் கொண்டிருக்கிறார். இதே பதிப்பகம் தான் ஜனாதிபதி வெங்கட்ராமன் எழுதிய சர்ச்சைக்குரிய நூலையும் வெளியிட்டிருந்தது.

# நவம்பர் ஜனாதிபதி தேர்தல்

இந்த மாத இறுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படலாம் என்று ஐலண்ட் தெரிவித்திருக்கிறது. நவம்பர் மாதம் 3ம் திகதி தேர்தல் திகதியாக அறிவிக்கப்படலாம் என்றும் ஏற்கனவே பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டு ஆயத்தங்கள் செய்யப்பட்டதால் இதற்காக விசேடமான ஆயத்தங்கள் எதுவும் தேவையில்லை என்று அப்பத்திரிகை கூறியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகம் சுத்திய வாலிபன்

கூட்டம் நடந்து கொண்டிருந்தது.. அரசியல் கூட்டம்.. தமிழனுக்கு மேடையும் மைக்கும் கிடைத்தால் கேட்கவா வேண்டும்? தங்களுக்கு தெரிந்த எல்லாவற்றையும் சொல்லி முடிக்கும்வரை மேடையிலிருந்து இறங்க மறுத்தார்கள்... பலர் இறக்கப்பட்டனர். ஆங்காங்கே தெரிந்ததை காட்டவும், மற்றவர்கள் தங்களது கருத்தோடு உடன்படுகிறார்களா என்று பார்க்கவும் கேள்விகள் கேட்டார்கள் சிலர். தமிழனுக்கு தெரிந்த அடுத்த விடயம் அது. கூட்டம் ஒரே அல்லோலகல்லோலப்பட்டது. கூட்டம் கூடிய நோக்கம் மறந்து எங்கோ போய்க் கொண்டிருந்தது. தெரிந்தது, தெரியாதது, அறிந்தது அறியாதது எல்லாம் நாமே என்ற மாதிரி.. ஒவ்வொருவரும் விளாசிக் கொண்டார்கள்.

இடையில் ஒருவர் எழுந்தார்... கோட், சூட் போடாத குறையாக உடுத்திருந்தவர் கண்ணாடி வேறு அணிந்திருந்தார்.. அரசியலைக் கரைத்துக் குடித்தவர் போல பேசத் தொடங்கினார். 'நான் சீனாவிலிருந்த போது சீனர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள் மாவோவை நேசிக்கிறார்கள் என்பது தெரிந்தது... நான் அமெரிக்காவில் இருந்த போது கறுப்பர்களைச் சந்தித்தேன். அவர்கள் உரிமைக்காகப் போராடினார்கள்.. நான் பிரேஸிலில் இருந்த போது.. நான் இங்கிலாந்தில் இருந்த போது...' என்று உலக நாடுகள் எல்லாவற்றிலும் தான் இருந்த போது பட்ட அனுபவங்களைச் சுவையாக சொல்லிக் கொண்டிருந்தார்.

பென் சூரியனுக்கு அருகில் இருந்த கியூறியஸும் முனியும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். சாரே.. இவரை பிடித்து அமுக்கி தாயகத்தில் எழுத வைக்க வேண்டும்.. நல்ல விசயம் தெரிந்த காய் போல இருக்கு என்று முனி சொல்ல.. அரசியல் எழுதா விட்டாலும் ஒரு உலகப் பயணக் கட்டுரை என்றாலும் எழுத வைக்க வேண்டும் என்பது கியூறியஸின் நோக்கம். 'சுத்துப்பயணக்' கட்டுரை மீது கியூறியஸின் அபிமானம் அப்படி..

எப்போ கூட்டம் முடியும், அந்த அறிஞருடன் பேச வேண்டும் என்று இருவரும் கதிரை நுனியில் இருந்தார்கள். காய் எங்கே வேலை செய்திருக்குமோ? நைஜீரிய மூளைசாலியாயிருப்பாரோ? அல்லது ஐ.நா சபைக்காக வேலை செய்திருப்பாரோ? உலக நாடுகள் எல்லாம் சுத்தியபடியால் ஒருவேளை இலங்கையில் நிர்வாக சேவையில் சேர்ந்து தூதுவரகங்களில் வேலை செய்திருப்பாரோ என்று இருவருமே மண்டையை உடைத்துக் கொண்டார்கள்.

அன்னாரின் பேச்சைக் கேட்டு கூடியிருந்தவர்கள் புல்லரித்துப் போனார்கள். இப்படி நாலு இடம் பார்த்து, நாலு விசயம் தெரிஞ்ச மனிசன் சொல்வதை யார் தான் கேட்க மாட்டார்கள்? பேசி முடிய ஒரே கைதட்டல்.. அப்படியாக அடித் தொண்டையில் கூட்டணி பாணியில் வெளுத்து வாங்கினார்.

கூட்டம் முடிந்ததும் மெதுவாக கியூறியஸும் முனியுமாக அன்னாரை தேடிப் பிடித்துக் கொண்டனர். உங்கட பேச்சைக் கேட்டோம், நன்றாக இருந்தது, நாங்கள் தாயகம் பத்திரிகையில் எழுதுபவர்கள் என்று தங்களை அறிமுகம் செய்ததுடன் பென் சூரியனையும் அறிமுகம் செய்தவுடன்... ஆ.. அப்படியா என்று ஒரு வித்யாகர்வத்துடன் அவர் சொன்ன மாதிரி இருந்தது.

நீங்கள் உலக நாடுகள் எல்லாம் சுத்தியிருக்கிறீங்கள்.. எங்க வேலை செய்தனீங்கள்? ஐ.நா சபையிலோ? என்று முனி இழுக்க.. அன்னார் கொடுத்தாரே ஒரு பதில்..

சீ.. சீ.. நான் கிறீஸ் கப்பலில பொயிலர் ரூமில வேலை செய்தனான்..

கியூறியஸ், முனியின் தலைக்கறுப்பைக் காணவேயில்லை.

## பென் சூரியனின் கட்டுக்கதைகள்


இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் வழங்கும்

**இளமாலை 94**

**நடனம், நாடகம், சுருதி இசை மன்னர்கள் வழங்கும் 'என்றும் இனியவை'**

செப்டம்பர் 17, சனி மாலை
Glenforest High School
3575 Fieldgate Dr (Bloor/Fieldgate)



உ

**சோதிடம்**

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல்
Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுக்கும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.
★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.
★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்
★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்
★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்களைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

**சி. சிதம்பரப்பிள்ளை**
இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்
தொடர்புகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont, L3R 7G7
(905) 513-9840




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகெங்கும் தொடரும் 25 யுத்தங்கள்

## சமாதான முயற்சிகளின் மத்தியிலும் தொடரும் யுத்தம்

உலகில் இன்றைய சூழ்நிலையில் பல இடங்களில் சமாதானம் ஏற்பட்டாலும் தொடர்ந்தும் பல இடங்களில் போராட்டங்கள் நடந்த வண்ணம் உள்ளன. வருடாந்தம் இந்த சிறிய யுத்தங்களால் ஐந்து லட்சம் பேர் இறந்து வருகிறார்கள்.

ஆனால் றுவாண்டாவில் நடைபெறும் யுத்தத்தில் இரண்டு மாதங்களில் மட்டும் பத்து லட்சம் பேர் இறந்திருக்கிறார்கள். இருபது லட்சம் பேர் அருகில் உள்ள ஸயருக்கு சென்றிருக்கிறார்கள்.

மேற்கு ஐரோப்பாவில் வட அயர்லாந்தை விட ஸ்பெயினின் பாஸ்க் பிரிவினைவாதிகளே போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். மற்றும்படி எல்லா போராட்டங்களுமே மூன்றாம் உலக நாடுகளில் தான் நடைபெறுகின்றன.

கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவின் உடைவுக்குப் பின்னர் யூகோஸ்லாவியாவில் பொஸ்னியாவில் நடைபெறும் யுத்தம் இன்னொரு பாரிய இழப்புகளை ஏற்படுத்துகிறது.

உலகெங்கும் சுமார் 25 இடங்களில் இந்த யுத்தங்கள் நடைபெறுகின்றன. இந்த யுத்தங்களினால் அழிவுகள் ஏற்படுவதுடன் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படக் கூடிய வளங்கள் அழிந்து போகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 149 யுத்தங்களில் 23 மில்லியன் பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பொஸ்னியாவில் 28 மாதங்களுக்கு முன்பாக யூகோஸ்லாவியக் குடியரசில் இருந்து பிரிய முயன்ற பொஸ்னியாவுக்கு எதிராக சேர்பியர்கள் கிளர்ந்தெழுந்ததால் தொடங்கிய யுத்தத்தின் பின்னர் தற்போது பொஸ்னியாவின் எழுபது வீதம் சேர்பியர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்களும் தற்போது சர்வதேச சமாதானத் திட்டத்தை நிராகரித்துள்ளனர். யுத்தத்தில் பல்லாயிக்கணக்கானோர் இறந்ததுடன் பல கோடி பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் 92 ஏப்ரலில் முஜாகிதீன்கள் 14 வருட ஆட்சியின் பின்னர் கம்யூனிஸ அரசை விரட்டி பதவிக்கு வந்த பின்னர் 11500 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஜனாதிபதி புர்கானுதீன் ரபானியை அகற்ற மற்றக் குழுக்கள் காபூல் மீது சூழவர உள்ள மலைகளில் இருந்து தாக்குதல் நடத்துகின்றன.

அங்கோலாவில் 75ல் போத்துக்கலில் இருந்து சுதந்திரம் கிடைத்தவுடன் ஆரம்பித்த யுத்தம் 91 ல் சமாதான ஒப்பந்தம் வந்து பின்னர் ஐ.நா தலைமையில் நடந்த தேர்தலை யுனிடா நிராகரித்ததன் பின்னர் யுத்தம் தொடர்கிறது. பத்து லட்சம் பேர் கொல்லப்பட்டோ, இடம் பெயர்ந்தோ உள்ளனர்.

சோமாலியாவில் இராணுவத் தலைவர் சியாட் பார் 91ல் அகற்றப்பட்ட பின்னர் போட்டிக் குழுக்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டதில் மூன்று லட்சம் பேர் பட்டினியால் மாண்டனர். பத்தாயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். 130 ஐ.நா துருப்புகள் கொல்லப்பட்டுள்ளனர்.

சுடானில் 83ல் தெற்கில் உள்ள கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டிப் போரிடுகின்றனர். இதில் பத்து லட்சம் பேர் இறந்துள்ளனர்.

இலங்கையில் வடக்கு கிழக்கு யுத்தத்தில் முப்பதாயிரம் பேர் வரை இறந்துள்ளனர்.

பங்களாதேஷ் 71ல் சுதந்திரம் பெற்ற பின்னர் கம்யூனிஸ எழுச்சியில் 2500 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இந்த எழுச்சி 1940 முதல் ஆரம்பித்த போதும் சுதந்திரத்தின் பின்னர் சூடு பிடித்தது.

பர்மாவில் 48ல் சுதந்திரம் பெற்ற பின்னர் எல்லைகளில் உள்ள சிறுபான்மைக் குழுக்கள் சுயாட்சி கோரி போரிட்டபோது 89ல் இராணுவ அரசு 12 கெரில்லாக் குழுக்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்தது. மொன், காரன் இனங்கள் தொடர்ந்தும் சண்டையிடுகின்றன. இதை விட போதைப் பொருள் உற்பத்தி செய்யும் குன் சாவின் 20 ஆயிரம் பேர் கொண்ட இராணுவம் தற்போது தனது பகுதியை சுதந்திர நாடாக அறிவித்துள்ளது. இதற்கு எதிராக யுத்தம் நடைபெறுகிறது.

காஷ்மீரில் 90 முதல் நடைபெறும் சண்டையில் 17 ஆயிரம் பேர் இறந்திருக்கிறார்கள். சீக்கியர்களும் தனிநாடு கோரிய போதும் தற்போது பெருமளவு அடக்கப்பட்டிருக்கிறார்கள்.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி 84 முதல் தனிநாடு கோருகிறது. 12700 பேர் வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஸ்பெயினில் பாஸ்க் கெரில்லாக்கள் 26 வருடங்களாக தனிநாடு கோரி வருகிறார்கள். இதில் 800 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பேருவில் 80ல் ஒளிரும் பாதை ஆயுதங்கள் தூக்கிய போது சுமார் 27 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். தற்போது பியுஜிமோறியின் அரசு பெருமளவு இதை அடக்கியிருக்கிறது.

கொலம்பியாவில் மார்க்ஸிச கெரில்லாக்கள் முப்பது வருடங்களா போரிடுகிறார்கள். பத்தாயிரம் பேரைக் கொண்ட மூன்று குழுக்கள் நடத்தும் சண்டையில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

கௌதமாலாவில் 33 வருட மோதலில் இடதுசாரிக் கெரில்லாக்கள் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டதுடன் நாற்பதாயிரம் பேர் காணாமல் போயுள்ளனர்.

கிழக்கு திமோரில் இந்தோனேசிய ஆக்கிரமிக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கில் இறந்துள்ளனர்.

தற்போது யுத்தம் நடைபெறும் பகுதிகள் இவைதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'



# அர்த்தமுள்ள காமசூத்திரம்

# காதலிப்பது எப்படி?

**அறிஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

றிச்சாட் பேட்டன் மொழி பெயர்த்த காமசூத்திரம் என்று நடிகர் றிச்சாட் பேட்டன் என்று பார்த்தால். · அது அவரல்ல. இது லண்டன், பனுரஸ் ஆகிய இடங்களில் இருந்த காமசூத்திரச் சங்கத்திற்காக 1838ல் றிச்சாட் பேட்டன் என்பவர் மொழி பெயர்த்ததாம்.

இதென்ன வடமொழிக்கு இத்தனை மரியாதை.. தமிழில் தான் எத்தனையோ இருக்கிறதே.. என்று தமிழின் பெருமை பாட சிலர் முன்வரக் கூடும். ஆமா.. ஆமா.. தமிழனுக்கு எதற்கும் ஒரு கடல் கோள் இருக்கிறது, சாட்டுச் சொல்ல.. உலகத்திலே எந்த விஞ்ஞானமாயிருந்தாலும் கலையாயிருந்தாலும் அது சங்க காலத் தமிழனிடம் இருந்ததாகவும் லெமுரியாக் கண்டத்தை கடல் கொண்டதுடன் எல்லாமே போய் விட்டதாகவும் அதன் பின்னர் குழந்தைப் பிள்ளைகள் 13ம் வாய்பாடு சொன்னமாதிரி தமிழன் தொடக்கத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டியதாகி விட்டது என்றும் தமிழன் கதை விடுவான். அதை நினைத்து விடுகின்ற கண்ணீரே ஒரு கடல் கொள்ளும். எப்படி தமிழனை விட்டு இலக்கியங்களை மட்டும் கடல் கொண்டு போனது.. தப்பித்த தமிழன் எங்கே இருந்தான் குமரிமுனையிலா? இந்தக் கடல் கோள் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு போய் சேர்த்த நேரம் தமிழனையே கொண்டு போய் சேர்த்திருந்தால் உலகம் உருப்பட்டிருக்கும்.

தமிழிலும் அதிவீரராம பாண்டியர் போன்றோர் நூல்கள் எழுதினார்கள் தான். ஆனால் காம சூத்திரம் இந்த கடல்கோளுக்கு தப்பி விட்டது. (அதற்கு பிந்திய காலம் போலும்). ஆனால் வாத்சாயனரின் காமசூத்திரம் தான் எல்லாமே என்று நினைக்கக் கூடாது. இது கூட ஒரு மூலம் குறிப்பிட்ட மறுபிரசுரம்.. நந்தின் என்பவர் காமசூத்திரத்தை ஆயிரம் அதிகாரங்களுடன் எழுதினார். இவர் சிவபெருமான் பார்வதி தேவியுடன் கலவியில் ஈடுபட்டிருக்கும் போது, காமசூத்திரத்தை போதித்தாராம். கொக்கோகத்தில் நந்திகேஸ்வரர் என்பது இவராகத் தான் இருக்க வேண்டுமாம்.

இதன் பின்னர் ஸ்வேதகேது காமசூத்திரத்தை ஐநூறு அதிகாரங்களில் சுருக்கி எழுதினார். இதன் பின்னர் பாப்ரவ்யன் 150 அதிகாரங்களில் சுருக்கி எழுதினார். பின்னர் வாத்சாயனர் அதை சுருக்கி எழுதினார். இதை விட தட்டாச்சாரியர் இன்னொன்று எழுதினார். அவர் சிறுவயதில் தாய் இறந்த பின்னர் சுவீகார மகனாக வளர்க்கப்பட்டு, விலைமாதர்கள் உலக விவகாரங்களில் தேர்ந்தவர்கள் என்று அவர்களோடு பழகி, அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்களின் செயற்பாடுகள் பற்றி ஒரு காமசூத்திரம் எழுதினார். வாத்சாயனர் இவரது நூல் பற்றி தனது நூலில் குறிப்பிட்டாலும் இவரது நூல் அழிந்து போய் விட்டது.. (கடல் கோள்?) இன்னும் பலர் பற்றி வாத்சாயனர் தனது நூலில் குறிப்பிடுகிறார். கோணிக்கபுத்திரன், கோதகமுகன், கொண்டாரன், சரயானர், சுவர்ணநாபன் ஆகியோரை...

இவர்களை விட கொக்கோலர் எழுதிய ரதி ரகஸ்யம், கல்யாண மல்லன் எழுதிய ஆனந்த ரங்கம் என்று பல நூல்களும் உள்ளன.

★ ★ ★

காமசூத்திரம் என்றால் ஏதோ அறுபத்து நான்கு சம்போகங்களும் மற்றும் பலான விசயங்களும் இருக்கும், அது வாசித்தல் ஆகாது என்று நினைப்பீர்களாயின் நீங்களும் உலகத்தமிழர்கள் தான்.. அதாவது காதினால் தாயகம் வாசிப்பவர்கள் மாதிரி.. ஊரைக் கெடுக்கும் கேள்விச் செவியர்கள். இது பாலியல் விளக்க நூல் அல்ல.. வாழ்வு முறை பற்றிய ஒரு நூல்.

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள்.. அதென்ன என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. காமசூத்திரம் அவற்றைப் பட்டியலிட்டிருக்கிறது. பாடுதல், இசைக்கருவி இசைத்தல், நாட்டியமாடுதல், எழுதல், வரைதல் முதல் கொண்டு சர்பத் செய்வது, இரசாயனவியல், சூதாடுதல் வரை பல்வேறு கலைகள் அவை.. கணிகையர் அவற்றை கற்றுத் தெளிந்திருக்க வேண்டுமாம். அவற்றை வெறுமனே தெரிந்திருந்தால் கூட அவளுக்கு கவர்ச்சி சேருமாம். அவற்றை ஆண்மகன் கற்றுத் தெளிந்தால் பெண்களின் இதயத்தைக் கொள்ளை கொள்ளுவானாம்..

ஹும்.. கியூறியஸிற்கும் இந்த ஆயகலைகளில் பெரும்பாலானவை தெரிந்திருந்தும் இதயத்தைக் கொள்ளை கொள்ள முடியலியே..

★ ★ ★

ஒரு சாதாரண மனிதன் ஒரு சாதாரண நாளில் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லவே ஒரு அதிகாரம். .. காலைக்கடன் கழித்து, பல் தீட்டி குளித்து, ஷேவ் எடுத்து.. என்று போகிறது.

இதை விட யார் நண்பர்கள், நண்பர்களுக்கான இலக்கணங்கள் பற்றி...

சிறுவயதில் புழுதியில் விளையாடியவர்கள், ஒரு விடயத்தில் கடமைப்பட்டவன், ஒரே விடயத்தில் ஈடுபாடுடையவன், ஒரே வகுப்பில் படிக்கும் மாணவன், உன் இரகசியங்களையும் தவறுகளையும்

**அறு(சு)வை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிந்தவன் போன்றோர் நண்பர்களாம்.

ஒரு நண்பனுக்கு இருக்க வேண்டிய குணங்கள்... உண்மை சொல்பவர்களாக, காலத்தினால் மாறாதவர்களாக, உறுதியானவர் களாக, மற்றவர்களால் வசியப்படுத்தப்பட முடியாதவர் களாக, உங்கள் இரகசியங்களை வெளியிடாதவர்களாக இருக்க வேண்டுமாம்.. எத்தனை நண்பர்களை இத்தனை குணாதிசயங்களுடன் தேடிப்பிடிக்க முடியும்? மற்றவர்களால் வசியப்படுத்தப்பட்டவுடன் இரகசியங்களை வெளியிடுவது தான் இங்கே நண்பர்களின் வேலையாக இருக்கிறது.

★ ★ ★

அறுபத்து நான்கு சம்போகம் என்றதும் பலர் பலவிதமாக சிந்திக்கக் கூடும். ஆனால் வாத்சாயனர் காமத்திற்கும் அறுபத்து நான்குக்கும் தொடர்பில்லை என்கிறார். தற்செயலாகத் தான் அந்தப் பெயர் வந்ததாக கூறுகிறார்.

காதல் காலத்தையோ, வழமையையோ பற்றி கவலைப்படாததால் எங்கேயும் எப்படியும் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்கிறார் வாத்சாயனர்.

முத்தமிடுதல் இந்தியக் கலாசாரத்தில் இல்லாதது, அது மேல்நாட்டார்க்குரியது என்று சிலர் வாதிட்டிருக்கிறார்கள். ஆனால் காமசூத்திரத்தில் முத்தத்தின் வகையறுக்களே உண்டு. இதழோடு இதழ் சேர்த்து கனியிதழ் பருகும் முத்தத்தை சொல்கிறேன். எங்கெங்கு, எப்படியெப்படி என்றெல்லாம்..

கண்ணதாசன் சொல்கின்ற அந்த நகக்குறிகள் பற்றிய முழு விபரங்கள் கூட உண்டு. இது அன்பை அதிகரிப்பதற்காகவும் அடையாள மாகவும் பயன்படுமாம்.

தாசிகள், அவர்களில் வகைகள், அவர்களின் நடைமுறைகள், வைப்பாட்டிகள் பற்றி நிறைய விபரங்கள்.

★ ★ ★

என்ன காரணங்களுக்காக பெண்கள் ஆண்களின் காதலை மறுப்பார்கள், (24 காரணங்கள்), எவ்வகையான ஆண்கள் இலகுவில் பெண்களை கவர்வார்கள், (24 வகை), எவ்வகையான பெண்களை இலகுவில் வசியப்படுத்தலாம் (41 வகை) என்பன பற்றி உண்டு.

எவ்வாறான பெண்களைத் திருமணம் செய்யலாம், எவ்வாறானவர்களை திருமணம் செய்யக் கூடாது (இதில் சரியாக ஒலிக்காத பெயரைக் கொண்ட பெண்ணும் அடக்கம்.. அப்படியாயின் அபிதகுஜாம்பாள்?) என்றெல்லாம் குறிப்பிடும் வாத்ஸ்யாயனர் ஒன்றைக் கூறுகிறார்... ஒரு ஆணின் குணாதிசயங்களை அறியாமல் ஒரு பெண்ணை பெற்றோர் அவனது பணத்துக்காக திருமணம் செய்து கொடுத்தால்.. அவளுக்கு வெளிச் சந்தோசங்கள் எல்லாம் இருந்தாலும் அவள் மற்ற ஆடவரை நாட வேண்டி ஏற்படும்... இது கனடா மாப்பிள்ளைகளுக்காய் அலையும் மாமனார்க்கு சமர்ப்பணம்.

இங்கே homosexuality எனப்படுகின்ற ஒருபாற் சேர்க்கை சர்ச்சைக்குரிய விசயம்.. ஆனால் அந்தக் காலத்திலேயே காமசூத்திரத்தில் அதைப் பற்றி வாத்சாயனர் சொல்லியிருக்கிறார்.

இதை விட காதலனிடம் எந்த முறைகளில் பணத்தைக் கறக்கலாம் (27 வழிமுறைகள்), ஒருவனை எப்படி காய் வெட்டலாம் (28 வழிமுறைகள்) ஒரு பெண்ணில் காதல் குறைந்து வந்தால் அவர் எப்படி நடந்து கொள்வார் (8 வழிமுறைகள்) என்பது பற்றி விபரங்கள் கிரமமாக உண்டு.

இதை விட அரசனின் அந்தப் புரத்தில் நுழைந்து சேட்டை புரிபவர்களுக்கு உதவியாக சில ஆலோசனைகளும் உண்டு. எப்படி உள்ளே நுழைவது முதல் கொண்டு... ஆபத்தில் எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்பது வரை.

விதவாவிவாகம் இன்று கூட முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில்.. அன்றே வாத்ஸ்யாயனர் பால்யவிவாகம் புரிந்து விதவையாகும் பெண்கள் மறுமணம் புரிவது பற்றி எழுதியிருக்கிறார்.

★ ★ ★

மாற்றான் மனைவி மேல் மையல் கொள்பவர்களுக்கான வழிமுறை களும் உண்டு. என்ன நோக்கங்களுக்காக ஒருவன் மாற்றான் மனைவியைத் தேடுகிறான் என்பது முதல் கொண்டு... இங்கே இந்த திருமணத்திற்கு அப்பாற்பட்ட தொடர்புகள் பற்றி நிறைய சர்ச்சைகள் உண்டு. ஆனால் இதையெல்லாம் சொல்லி விட்டு வாத்சாயனர் சொல்கிறார்.. சாஸ்திரங்களில் இருந்து மற்றவர்களின் மனைவியரை வெற்றி கொள்வது பற்றி கற்றுக்கொள்கின்ற புத்திசாலி தன் மனைவிகள் விசயத்தில் ஏமாற்றப்பட மாட்டான். எப்படியாயினும் ஒருவரும் இந்த வகைகளில் மற்றவர்களின் மனைவியரை வசியம் பண்ண முயற்சிக்கக் கூடாது, ஏனெனில் எப்போதும் அவர்கள் வெற்றி பெறுவதில்லை, இதைவிட பல சமயங்களில் ஆபத்தாக முடியும். இது தர்மத்திற்கும் அர்த்தத்திற்கும் அழிவாகும். இந்த புத்தகம், நல்ல மக்களுக்காக எழுதப்பட்டது, அவர்களின் மனைவியரை பாதுகாப்பதற்கு வழிகாட்ட எழுதப்பட்டது, இந்த புத்தகத்தைப் பயன்படுத்தி மற்றவர்களின் மனைவியரை அடையக் கூடாது.. என்கிறார்.

மாற்றான் மனைவி பற்றி ஒரு கொசுறு.. கடந்த வாரம் ரொறன்ரோவில் பெட்ரோல் நிலையத்தில் ஒருவர் மாற்றான் மனைவியுடன் அமர்ந்து பெற்றோல் விட்டுக் கொண்டிருக்க.. வீதியால் சென்று கொண்டிருந்த கணவன் கண்டு பெற்றோல் நிலையத்துள் வர.. கணவனைக் கண்டவர் வேகமாய் காரை இழுக்க.. கார் போய் பெற்றோல் நிலைய பொருட்களுடன் மோத... இருவரும் காரை விட்டு இறங்கி அடிபடாத குறையாய் மோத.. கடைசியில் பெண்.. வந்த பொலிசாருடன் போய் விட்டார்.

★ ★ ★

காதலிப்பது எப்படி என்று இளவயதில் மண்டையை உடைத்துக் கொண்டு 'அனுபவம் வாய்ந்த' நிபுணர்களிடம் கேட்டிருப்பீர்கள். அவர்களும் தங்கள் பங்குக்கு புழுகித் தள்ளுவார்கள். காமசூத்திரத்தில் எப்படி ஒரு பெண்ணை வசியமாக்கலாம் என்று இருக்கிறது.. கொஞ்சம் கேளுங்களேன்..

அந்தப் பெண்ணின் கண்ணில் இயற்கையாகவோ, தற்செயலாகவோ படும்படி நடமாட வேண்டும். இருவரும் பொதுவாக சந்திக்கக் கூடிய வீடுகள், திருமணம் போன்ற வைபவங்கள் இதற்கு உகந்தவை. ஆனால் அவளின் கண்ணில் படும் போதெல்லாம் தனது உள்ளக்கிடக்கையைக் காட்டும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

மீசையை முறுக்கலாம், நகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம் ஒலியெழுப்பலாம். தனது நகைகள் மூலம் ஒலியெழுப்பலாம். கீழுதட்டைக் கடிக்கலாம்.

அவள் திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் தன் நண்பர்களுடன் அவளைப் பற்றியும் மற்றும் பெண்களைப் பற்றியும் கதைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தனது பெருந்தன்மையையும் ரசனையையும் காண்பிக்க வேண்டும்.

இன்னொரு பெண்ணோடு இருக்க வேண்டி வந்தால், அடிக்கடி கொட்டாவி விட வேண்டும். உடம்பை முறுக்க வேண்டும். கண்ணை தூங்குவது போல் பாசாங்கு செய்ய வேண்டும். களைத்துப் போயிருப்பது மாதிரி கதைக்க வேண்டும். அவள் கதைக்கும் போது அக்கறையில்லாமல் கேட்க வேண்டும்.. (காரணம் அந்தப் பெண்ணை கோபமூட்டக் கூடாது என்பதற்காக)

இதை விட இரட்டை அர்த்தத்தில் மற்றவர்களோடோ, குழந்தைகளோடோ பேச வேண்டும். அவளை மனதில் வைத்து இப்படி பேச வேண்டும். அவள் காணும் போதுகளில் நிலத்தில் விரலாலோ தடியாலோ கீற வேண்டும். அவள் பார்க்கும் போது குழந்தையை முத்தமிட வேண்டும். அந்தக் குழந்தைக்கு தனது நாக்கின் மூலம் வெற்றிலையைக் கொடுக்க வேண்டும். அதன் நாடியை அக்கறையோடு தடவ வேண்டும். இவையெல்லாம் சரியான இடங்களில் சரியான நேரத்தில் செய்ய வேண்டும்.

தனது மடியில் உள்ள குழந்தையை கிள்ளி விளையாட வேண்டும். பேச்சுக் கொடுக்கும் போது அந்தக் குழந்தை பற்றியும் பேசலாம். இதன் பின்னர் இந்தப் பெண்ணுக்கு அவனைத் தெரிய வரும். அவளது உறவினர்களுடனும் நெருக்கமாக வேண்டும். இதன் பின்னர் இந்தச் சாட்டில் அடிக்கடி உறவினர் வீட்டுக்கு செல்ல வேண்டும். அந்த நேரங்களில் அவள் இல்லாத நேரங்களில், அவளுக்கு கேட்கக் கூடியதாக காதல் பற்றி பேச வேண்டும். நெருக்கம் அதிகமாகும் போது ஏதாவது பொருளை அவளிடம் பாதுகாப்பாக வைத்திருக்கும்படி கூறிவிட்டு, பின்னர் போய் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்க வேண்டும். உதாரணத்திற்கு வெற்றிலை, பாக்கு.

இதன் பின்னர் தான் உதைக்கிறது.... அவன் தனது மனைவியுடன் இந்தப் பெண்ணை நெருக்கமாக பழக விட வேண்டும். அவர்கள் இரகசியமாக பேசும் அளவுக்கு... அவளை அடிக்கடி சந்திப்பதற்காக அவள் செல்கின்ற பொற்கொல்லன், நகைக்கடைக்காரன் போன்றோருடன் தொடர்பு கொள்ள வேண்டும். பின்னர் அவளுடன் ஏதாவது காரணங்களைச் சொல்லிச் சொல்லி சென்று சந்திக்க வேண்டும்.

அவள் எதையாவது விரும்பினால், பணம் தேவைப்பட்டால், எதையாவது கற்க வேண்டுமென விரும்பினால் அவளுக்காக எதையும் செய்ய தயாராய் இருப்பதாக தெரிவிக்க வேண்டும். தன்னால் அவை எல்லாம் முடியும் என்பதைக் காண்பிக்க வேண்டும்.

மற்றவர்களோடு சேர்ந்து உரையாடும் போது அவன் சொல்லும் எந்தக் கருத்துடனும் அவள் முரண்பட்டால் அவளோடு வாக்குவாதம் செய்யாமல் அவள் சொல்வதே சரி என்று சொல்ல வேண்டும்.

இவ்வாறாக பெண் வசியப்பட்டதும் உடைகள், நகைகள், பூக்கள் கொடுக்க வேண்டும். அந்த நேரங்களில் கொடுக்கும் பொருட்கள் பெறுமதியானவையாகவும் அழகானவையாகவும் இருக்க வேண்டும்.

இதைவிட அவளிம் வெற்றிலை கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். தான் விருந்துக்குப் போகும் போது அவளின் கையில், தலையில் இருக்கும் பூவைக் கேட்டு வாங்க வேண்டும். அவளுக்கு அவன் பூ கொடுப்பானாயின் அது மணமுள்ளதாகவும் அவனது நக, பற்குறிகள் பட்டதாகவும் இருக்க வேண்டும். இப்படியாக அவளது பயத்தைப் போக்கி, அவளை தனியான இடத்திற்கு அழைக்க வேண்டும். அங்கே அவளை அணைத்து முத்தமிட வேண்டும். பொருட்களை கொடுத்து வாங்கும் போது அவளின் முக்கிய பகுதிகளை தொட வேண்டும்.

ஒரு பெண்ணை வசியம் பண்ண முயலும் ஒருவன் அதே நேரம் இன்னொரு பெண்ணை வசியம் பண்ணக்கூடாது. ஒருத்தியை வெற்றி கொண்ட பின்னர் வேண்டுமானால் இன்னொருத்தியைத் தேடலாமாம்.

இது வாத்சாயனரின் காதலிப்பது எப்படி என்ற பாடம்... இதுகாலம் தாழ்த்தி கியூறியஸ் கையில் அகப்பட்டது. இது ஏற்கனவே அகப்பட்டிருந்தால் கதையே வேறு.. என்ன செய்ய.. தலைவிதி அப்படி.. சொல்லித் தருவதுண்டோ மன்மதக் கலை. இதைக் கரைத்துக் குடித்த வாத்சாயனர்கள் பலர் இங்கே உள்ளர். இதுவரையும் உங்களுக்கு வழி தெரியாதிருந்தால்.... go young man, love and conquer.

★ ★ ★

இதைவிட மட்டக்களப்பு மாந்திரிகர்கள் மாதிரி சில விசயங்களைச் சொல்கிறது.. ஆண்மைக்குறைவா? வீரியக் குறைவா? ரிஷி அஜமாமிச லேகியம் பாவியுங்கள்... மட்டுநகர் மாந்திரிகர் நீலனுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்ற மாதிரி பலவேறு மூலிகை விவகாரங்கள் எல்லாம் உண்டு. The Herb will heal the nation. மற்றவர்களின் கண்களுக்கு தெரியாமல் இருப்பதற்கும் வழிமுறைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மருந்து தயாரிக்க பாம்பின் கண்கள், ஏதோ ஒரு மிருகத்தின் இதயம், ஏதோ ஒரு பழத்தை எரித்து அதன் சாம்பலை நீருடன் கலந்து கண்களில் பூசினால் யார் கண்ணிலும் படாமல் போய் வரலாமாம். ஜாக்கிரதை.. மீண்டும் உருவம் வருவதற்கான மாயங்கள் சொல்லப்படவில்லை.

★ ★ ★

காமசூத்திரம் வாழ்வுக்கான பல நல்ல நெறிகளைச் சொல்கின்ற நூல்.. வெறும் ஆபாசப் புத்தகம் அல்ல. காமசூத்திரம் பற்றி நான் எழுதி விட்டேனா.. இனியென்ன.. தமிழ் மக்களின் நன்மை கருதி இங்கேயுள்ள தொழில் அதிபர்கள் உடனடியாக இறக்குமதி செய்து வினியோகிப்பார்கள். ஒரு காலத்தில் தாயகம் கடைகளில் விற்கக் கூடாது என்று தடை செய்தவர்கள், இன்று காமசூத்திரா, பருவகாலம் போன்ற புத்தகங்களை தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக என்றே இறக்குமதி செய்து வினியோகிப்பது சிரிப்பாயில்லையா?

★ ★ ★

இந்த மாஜி புலி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் பலர் பயங்கரமான பேர்வழிகள்.. மாஜி புலி ஒருவர் இங்கே எல்லாவற்றையும் விட்டு வந்து.. இங்கே தமிழர்கள் வாழும் கட்டடத் தொகுதி ஒன்றில் 'சுப்பராக' இருக்கிறாராம். தமிழர் வந்துவிட்டார், எங்களுக்கு பெரிய உதவி என்று நினைத்தவர்களுக்கு விழுந்தது இடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கே நிற்கும் வரை தலைமை விசுவாசத்தால் தமிழர்களுக்கு துன்பம்.. இங்கே வந்ததும் எஜமான விசுவாசத்தால் தமிழர்களுக்குத் துன்பம்.. தமிழர்கள் வீட்டில் குறைபாடுகள் இருந்து திருத்தும்படி கேட்டால்.. விரும்பினால் இரு, இல்லாட்டா போ என்ற மாதிரி அலட்சியமான பதில்.. நிர்வாகத்துடன் சேர்ந்து தமிழர் பலரை மிரட்டல்..

இது எல்லாம் பரவாயில்லை.. காமசூத்திரம் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் வேறு உண்டாம்.. காக்க காக்க கடவுள் காக்க!

★ ★ ★

அதிவீரராமபாண்டியரும் இது சம்பந்தமாக எழுதியதாக கேள்வி. கொக்கோகம் என்றெல்லாம் வந்ததாம். இதுவரை வாசிக்கக் கிடைக்கவில்லை. கிடைத்தால் எனக்கும் ஒரு பிரதி!

தெரிந்த வரையில், தமிழ்வாணனின் மணிமேகலை பிரசுரம் முன்பு தமிழில் காமசூத்திரம் வெளியிட்டதாக ஞாபகம். அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்து விட்டதாக முன்பு வாசித்த ஞாபகம். இங்கே ஒரு தடவை இந்தியாவிலிருந்து காமசூத்திரம் போன்ற நூல்களை விசேடமாகத் தருவித்து சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்த இளவட்டங்கள் அடுப்பில் எதையோ சூடாக்கியதையும் மறந்து போயிருக்க... அடுப்பில் தீ பிடித்து பக்கத்து வீட்டுக்காரன் தீயணைக்கும்படையை அழைக்க.. தீயணைப்புப் படைக்காரன் வந்து கதவை உடைக்கும் வரைக்கும் காமசூத்திரர்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியாதாம்.

காமசூத்திரம் வெறும் வாசிப்புக்குரியது அல்ல. அந்தக் காலத்து வாழ்வு முறைகள், இன்றைய நவீன யுகத்திலும் ஏற்றுக் கொள்ள மறுக்கப்படுகின்ற பிற்போக்குத் தனங்கள் புராதன காலங்களில் வழமையாக இருந்தமை என்று பல்வேறு விசயங்களைச் சொல்கின்ற ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் (?). தற்கால நடைமுறைகளுக்கு ஒவ்வாத பல விடயங்கள் இருந்தாலும் உண்மையில் நல்ல புத்தகம்.. வாசித்துத் தான் பாருங்களேன். வாசிப்பதால் நாங்கள் எதையும் இழக்கப் போவதில்லையே!

★ ★ ★

இழப்பு பற்றி வாத்ஸாயனர் சொல்கிறார்..
எங்கள் முயற்சிகளில் எதையாவது அடையலாம் என்றால் சில நேரங்களில் இழப்பு தான் கிடைக்கிறது. அதற்கு காரணங்கள்..
புத்திக் குறைவு, அதீத காதல், அதீத பெருமை, அதீத எளிமைத்தனம், அதீத தன்னம்பிக்கை, அதீத கோபம், கவனக்குறைவு, கட்டுப்பாடின்மை, தற்செயலான சூழ்நிலைகள்.

இழப்பின் பயனால் வருவது...

எந்த பயனும் இல்லாத செலவு, எதிர்கால வளத்தின் அழிவு, கிடைக்க வேண்டிய பயன்கள் நிறுத்தப்படுதல், ஏற்கனவே கிடைத்தது இழக்கப்படுதல், யாராலும் விரும்பப்படாத நிலை, தலைக்கு பழுது, மயிர் கொட்டுதல்...

மயிர் கொட்டுகிறதா.. கவலையை விடுங்கள்.. இருக்கவே இருக்கிறது ஒரு சிறுகுமிழ்! அதுவும் காமசூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. மயிர் வளர்வதற்கு, மயிரைக் கறுப்பாக்க, மயிர் கொட்ட எல்லாம் மருந்து மாயங்கள் காமசூத்திரத்தில் உண்டு.

★ ★ ★

இந்த இறக்குமதியாளர்கள் இந்த காமசூத்திரக்குப்பைகளை இறக்குமதி செய்து 'சமூக சேவை' செய்வதைவிட, உண்மையான காமசூத்திரத்தை இறக்குமதி செய்தால் பலரும் பயன் பெறலாம்.

சூத்திரத்தின் துணையோடு காமனை வெல்லுங்கள்!

**கடந்த சில வாரங்களாக தாயகம் தாமதமாகி வருவதால் வாசகர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மன்னிப்பு கோருகிறோம். நிலைமை சீரடையும் வரை தாயகம் வார இறுதியிலேயே வெளிவரும். அடுத்த வாரம் தாயகம் வெளிவர மாட்டாது.**

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

**தாயகம்**
**சந்தா விபரம்**
கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்**
**அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!**

# அன்ரனி பிறதர்ஸ்

★ உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்

★ போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

★ லேசர் இசைத்தட்டுக்கள் மலிவு விலையில்


★ தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன்

★முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets

## ANTONY BROTHERS

1472 Queen St West (Queen/Lansdowne)
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903

**வாரத்தில் 7 நாட்களும்**
**காலை 9 மணி முதல்**
**இரவு 11 மணி வரை**




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள்,

சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


SIVA'S TRADING CO LTD

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

SIVA'S TRADING CO LTD
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99